வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 18.09.2021 சனிக்கிழமை | இதழ் : 287 | பக்கங்கள் : 16

# ஊரடங்கு சட்டம் ஒக். 1 வரை நீடிப்பு

- பிள்ளைகளுக்கு பைஸர் தடுப்பூசியை ஏற்றுமாறு ஜனாதிபதி ஆலோசனை
- அத்தியாவசிய சேவைகளை தொடர்ந்து நடத்துமாறும் அறிவுறுத்தல்

கொழும்பு, செப்ரெம்பர் 18

நாடு முழுவதும் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று மெய்நிகர் தொழில் நுட்பத்தினூடாக இடம்பெற்ற கோவிட் கட்டுப்பாட்டு செயலணியின் விசேட கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. 15

## பிரித்தானியாவின் சிவப்பு பட்டியலிலிருந்து இலங்கை நீக்கம்

லண்டன், செப். 18

எதிர்வரும் 22ஆம் திகதி முதல் இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் பிரித்தானியாவின் சிவப்பு பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட உள்ளன.

கொவிட் பரவல் காரணமாக இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் பிரித்தானியாவின் சிவப்பு அறிக்கைக்குள் உள்வாங்கப்பட்டன.

அதன்படி, துருக்கி, பாகிஸ்தான், மாலைத்தீவு, பிலிப்பைன்ஸ்,ஓமான் மற்றும் கென்யா போன்ற நாடுகள் அந்த சிவப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதில் இலங்கை உட்பட சில நாடுகள் இந்தப் பட்டியலிலிருந்து எதிர்வரும் 22 ஆம் திகதியுடன் நீக்கப்படுகின்றன.



யாழில் சடலமாக கண்டெடுக்கப்பட்ட

## இளைஞன் மரணத்துக்கு நீதி கேட்டு போராட்டம்!

யாழ்ப்பாணம், செப். 18

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் அண்மையாக சடலமாக கண்டெடுக்கப்பட்ட இளைஞனின் மரணத்துக்கு நீதி கோரி, உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையம் முன்பாகவுள்ள வீதியில், சுயநினைவற்று கிடந்த இளைஞனை 15

## தடுப்பூசி பெறாதோருக்கு தடையில்லை

கொழும்பு, செப். 18

கோவிட்-19 நோய்த்தொற்றுக்கு எதிராக எந்த தடுப்பூசியும் பெறாத நபர்கள் வீதிகளில் பயணம் செய்வதற்கோ அல்லது பொது இடங்களுக்கு செல்வதற்கோ தடை விதித்து எந்த உத்தரவும் 15

## பட்டமளிப்பு விழாவை நடத்த இப்போது அனுமதி இல்லை!

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் பதில்

கொழும்பு, செப். 17

எதிர்வரும் நாள்களில் கோவிட் 19 நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றைய நாளில் சாதகமாகப் பரிசீலிக்கப் படலாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ 15

## கொரோனாவால் 121 பேர் மரணம்

கொழும்பு, செப். 18

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 121 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் 15



## குவிந்தனர் ‘குடி’மக்கள்

யாழ்ப்பாணம், செப். 18

நேற்று திடீரென மதுபானச்சாலைகளை திறக்க அனுமதி வழங்கப்பட்டதால் நாடு முழுவதும் மதுபானச்சாலைகளுக்கு முன்பாக பெரும் சனக்கூட்டம் அலைமோதியது. 15

## வவுனியாவில் 53, முல்லையில் 28 வடக்கில் நேற்று 110 தொற்றாளர்!

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வக முடிவு

யாழ்ப்பாணம், செப். 18

வவுனியாவில் 50 பேரும், புதுக்குடியிருப்பில் 28 பேருமாக நேற்று வடக்கு மாகாணத்தில் 110 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப் பட்டனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 330 பேரின் மாதிரிகள் நேற்று யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன. இதிலேயே 110 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, வவுனியா 15

## 500,000 கடந்தது தொற்று

கொழும்பு, செப். 18

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 5 இலட்சத்தைக் கடந்துள்ளது.

கொரோனா தொற்று உறுதியான மேலும் 2070 பேர் நேற்று அடை 15

## நேற்று மட்டும் 45.95 பில்லியன் ரூபாய் அச்சிட்டது இலங்கை மத்திய வங்கி

கொழும்பு, செப். 18

இலங்கை மத்திய வங்கி நேற்று வெள்ளிக்கிழமை 45.95 பில்லியன் ரூபாவை அச்சிட்டது.

புதிய ஆளுநர் கப்ராலின் கையொப்பத்தின் கீழ் முதல் பண அச்சிடல் இதுவாகும். 15



## இப்படியும் நடக்கிறது...!

சிறுவனாக இருந்தபோது படித்த முல்லாவின் கதையொன்று இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

ஓர் ஊரில் ஒரு பள்ளிவாசல் இருந்தது. அங்கே தொழுகை நடந்து கொண்டிருந்தது. முல்லா அந்த வழிபாட்டை முன்னின்று நடத்திக்கொண்டிருந்தார்.

"கருணையும் இரக்கமும் மிக்க ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரான அல்லாவின் திருப்பெயரால்...", இவ்வாறு முல்லா கூறிக் கொண்டிருந்தபோது, குரு நானக் அங்கு வந்தார்.

அவர் முகத்தில் புன்முறுவல்.

முல்லாவுக்கு கோபம் வந்து விட்டது. "ஏன் சிரிக்கிறாய்?", என்று கேட்டார் முல்லா.

"நண்பா! நீ செய்வது தொழுகை அல்ல. அதனால் சிரிக்கிறேன்", என்றார் குரு நானக்.

"என்ன சொல்லுகிறாய்? தொழுகை இல்லையா?", என்று திரும்பக் கேட்டார் முல்லா.

"ஆமாம் உன்னுள்ளே பிரார்த்தனை என்பதே இல்லை", என்றார் குரு நானக்.

முல்லாவின் கோபம் இன்னும் அதிகமாயிற்று. நேராக ஒரு நீதிபதியின் முன்னால் போய் நின்றார்.

"நீதிபதி அவர்களே! இந்த ஆள் நாங்கள் தொழுகிற வேளையில் பள்ளிவாசலுக்குள் நுழைந்தார். அதுமட்டுமல்ல வழிபாடு செய்கிற எங்களைப் பார்த்துச் சிரிக்கிறார். இவருக்கு நீங்கள் தண்டனை வழங்க வேண்டும்", என்று வேண்டுகோள்விடுத்தார் முல்லா.

நீதிபதி குருநானக் பக்கம் திரும்பினார். "நீங்கள் சிரித்தது உண்மையா?", என்று கேட்டார்.

"உண்மைதான். அவர் செய்தது பிரார்த்தனை அல்ல. அதனால், சிரித்தேன். அவரை நான் சில கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும்", என்றார்.

முல்லா வந்து முன்னால் நின்றார்.

"அவர் கையில் ஒரு புனித குர் ஆனைக்கொண்டு வந்து கொடுங்கள்", என்றார் குருநானக்.

"இப்போது சொல்லுங்கள்... உங்கள் உதடுகள் அல்லாவை உச்சரித்த வேளையில் உங்கள் மனம், வீட்டிலே விட்டு வந்த கோழிகளை நினைத்ததா? இல்லையா?"

முல்லா கையில் குர் ஆன் இருந்தது. "உண்மைதான்", என்று முல்லா ஒப்புக்கொண்டார்.

கொரோனா நெருக்கடி தொடர்பாக அனைத்துத் தரப்பினரும் வெளியிடுகின்ற செய்திகளைப் படிக்கின்றபோது மேலே உள்ள முல்லாவின் கதை ஞாபகத்திற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.

கொரோனா வைரஸின் டெல்டா திரிபு நம்மை படாதபாடுபடுத்தி வருகின்றது. நூற்றி ஐம்பது பேரின் வைரஸ் மாதிரிகளை பரிசோதித்தபோது அவற்றில் 148 பேரின் வைரஸ் டெல்டா வகை என்று ஓர் ஆய்வில் தெரியவந்தது. இது மிக வேகமாகப் பரவக்கூடியது என்று எச்சரிக்கின்றனர்.

அதனால், நாட்டை தொடர்ந்து முடக்க வேண்டும் என்று அரசியல்வாதிகளிலிருந்து சுகாதாரத்துறையினர் வரை அனைவருமே கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவ்வாறு முடக்குகின்றபோது, நாடும் சேர்ந்து முடங்கி விடும் என்பதும் அவர்களுக்குத் தெரியாததல்ல.

ஆனாலும், இவ்வாறு கோரிக்கை வைப்பவர்கள் முடக்கத்தை கைவிடுகின்றபோது மீண்டும் வைரஸ் பரவுவதை தடுப்பது எப்படி என்பதையும் அல்லவா தெரிவிக்கவேண்டும். மக்கள் தடுப்பூசிகளைப் போடவேண்டும் என்பதுதான் ஒரே வழி என்பதையும் அவர்கள் வலியுறுத்த தவறுவது, கோழியை நினைத்துக் கொண்டு பிரார்த்தனை செய்வது போன்றது.!

அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகளின் ஒரே குறி...!

**- ஊர்க்குருவி**

# சேதன பசளையை கிளிநொச்சி, முல்லை. விவசாயிகளே உற்பத்தி செய்யும் திட்டம்!

கிளிநொச்சி, செப். 18

குறுகிய காலத்தில் சேதனப் பசளையை விவசாயிகளே உற்பத்தி செய்யும் திட்டம் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

உலக வங்கியின் நிதி அனுசரணையில் விவசாய அமைச்சின் கீழான காலநிலைக்குச் சீரமைவான விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மண்டைக்கல்லாறு மற்றும் பேராறு நீரேந்து பிரதேசத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதில், விவசாயிகளின் தேவைக்கு ஏற்ப சேதனப் பசளை உற்பத்திக்கான உள்ளீடுகள், உபகரணங்கள், பயிற்சிகளை வழங்குவதோடு தொடர்ச்சியாக கண்காணித்து விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளும் வழங்கப் படுகின்றன.

மூன்று பிரிவுகளாக செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில், விவசாயிகள் தங்கள் பயிர் செய்கை பரப்பு மற்றும் உள்ளீடுகள், தொழிலாளர் என்பவற்றை கவனத்தில் கொண்டு இதில் இணைய முடியும். இணைய விரும்பும் இந்த மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதி விவசாய போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## நகை திருட்டு ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் மாநகரில் வீடுடைத்து 10 பவுண் தங்க நகைகளைத் திருடியவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தலைமறைவான நிலையில் தேடப்படுகிறார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் சுபாஷ் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கடந்த 15ஆம் திகதி 10 தங்கப் பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன. வீட்டில் எவருமில்லாத சமயம் வீடுடைத்து இந்த திருட்டு இடம் பெற்றது.

யாழ். பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதில், குருநகரை சேர்ந்த 24 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 5 தங்கப் பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொருவர் தலைமறைவாகியுள்ளார். கைதான சந்தேகநபர் நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். (ஐ)

## கசிப்புடன் ஒருவர் கைது!

தருமபுரம், செப். 18

75 லீற்றர் கசிப்புடன் கிளிநொச்சி தருமபுரம் - நெத்தலியாறு காட்டுப் பகுதியில் ஒருவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதன நபரிடமிருந்து 75 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப் படும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப் படுகின்றார். (ஐ)

## 159 தொற்றாளர்

யாழ்ப்பாணம், செப். 18

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் 159 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அத்துடன், 7 பேர் உயிரிழந்தனர்.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் 16 நாள்களில் வடக்கு மாகாணத்தில் 6 ஆயிரத்து 667 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். 240 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் மட்டும், யாழ்ப்பாணத்தில் 36 பேரும், வவுனியாவில் 61 பேரும், கிளிநொச்சியில் 39 பேரும், முல்லைத்தீவில் 18 பேரும், மன்னாரில் 5 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

### கல்வி TV CHANNEL-1

**18.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2

**18.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu ஈழநாடு
18.09.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிதல்

மாறி, மாறி ஊடவியலாளர் சந்திப்புக்கள் இடம்பெறுகின்றன. சுமந்திரன் தலைமையிலான இலங்கை தமிழ் அரசு கட்சி ஒரு புறமாகவும், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பிறிதொரு புறமாகவும் ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்திவருகின்றனர். வழமைபோல் இதற்கான பிள்ளையார் சுழியை, தமிழ் அரசு கட்சியினரே வரைந்திருந்தனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர். இதற்கு ஏனையவர்கள் பதிலளித்திருக்கின்றனர். கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளில் ஒன்றான புளொட் இயக்கத்தின் தலைவர், தர்மலிங்கம் சித்தார்த்தன்மீது சுமந்திரன் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். இதற்குக் கடும் தொனியில் சித்தார்த்தன் பதிலளித்திருக்கின்றார். ஆனால், இவ்வாறாகக் கடுமையாக முரண்பட்டுக் கொண்டே, இதனால் கூட்டமைப்பு உடைந்துவிடப் போவதில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்த விடயங்களில் தலையீடு செய்து, பிரச்னைகளை சுமூகமாக கையாள வேண்டிய, கூட்டமைப்பின் தலைவரோ ஆழ்ந்த தியானத்தில் இருக்கின்றார். ஆனால், இவ்வாறான செயல்பாடுகளால் கூட்டமைப்பு மேலும் பலவீனமடைந்து செல்கின்றது.

கூட்டமைப்பு அடிப்படையில் ஒரு சாம்பார் கூட்டாகும். அதற்குள் பலவிதமான நபர்கள் இருக்கின்றார். விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று குறிப்பிட்ட சம்பந்தன் இருக்கின்றார். விடுதலைப் புலிகளின் வழிமுறைகளை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளாத சுமந்திரன் இருக்கின்றார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை தேசியத் தலைவர் என்று அழைப்பவர்கள் இருக்கின்றனர். சம்பந்தனோ, சுமந்திரனோ தவறியும் ஒருபோதுமே விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து போராடியவர்களை மாவீரர்கள் என்றோ, அவர்களை தியாகிகள் என்றோ கூறியதில்லை. ஆனால், மாவீரர் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்வதற்காக வேட்டியை மடித்துக்கட்டிக் கொண்டு நிற்பவர்கள் பலர் தமிழ் அரசு கட்சியில் இருக்கின்றனர்.

அதேவேளை ஒருகாலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் தடை செய்யப்பட்டு, பின்னர் அதனடிப்படையில் ஆயுத மோதல்களில் ஈடுபட்டவர்களான ரெலோ, புளொட் போன்ற முன்னாள் ஆயுத இயங்கங்களும் இருக்கின்றன. ரெலோ இயக்கத்தின் தலைவர் சபாரத்தினத்தை புலிகள்தான் இல்லாமலாக்கினர். அண்மையில்கூட இதனை செல்வம் அடைக்கலநாதன் குறிப்பிட்டிருந்தார். அதேபோன்று ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் தலைவர் பத்மநாபாவையும் விடுதலைப் புலிகளே இல்லாமலாக்கினர். அதில், அதிர்ஷ்டவசமாக தப்பியவர்த்தான் சுரேஷ் பிறேமச்சந்திரன். இவைகள் எல்லாம் தமிழ் அரசியல் பரப்பில் நன்கு அறிந்த விடயங்கள். இதற்கு பின்னர்தான், விடுதலைப் புலிகள் இயக்கம், ரெலோவையும் ஈ. பி. ஆர். எல். எவ்வையும் நோக்கி நேசக்கரம் நீட்டியிருந்தது. அந்த அடிப்படையில்தான் கூட்டமைப்பில் அவர்கள் இணைந்து கொண்டனர்.

உண்மையில் ரெலோ மற்றும் ஈ. பி. ஆர். எல். எவ். கூட்டமைப்பில் எங்களையும் சேருங்கள் என்றுகூறி வன்னிக்கு செல்லவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம்தான் அவர்களை நோக்கி நேசக்கரத்தை நீட்டியிருந்தது. பழையதை மறப்போம், புதியதை நினைப்போம் என்னும் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டு நின்றவர்கள் அனைவரும் கூட்டமைப்பில் இணைந்து கொண்டனர். 2009 வரையில் கூட்டமைப்பிற்கு என தனித்துவமான தலைமைத்துவம் இருந்திருக்கவில்லை. புலிகள் எதனை செய்கிறார்களோ, அதற்கு ஆதரவாகப் பேசுகின்ற வேலையை மட்டுமே கூட்டமைப்பு செய்துகொண்டிருந்தது. ஆரம்பத்தில் இணைந்து கொள்ளாத புளொட் பின்னர் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டது.

புலிகளுக்கு பின்னரான கடந்த பத்து வருடங்களாக அனைவரும் ஒரு குடையில்தான் செயல்பட்டுவருகின்றனர். கூட்டமைப்பை விட்டு வெளியேறியிருப்பவர்கள் அனைவருமே சம்பந்தனுடன் முரண்பட்டு வெளியேறியவர்கள்தான். ஆனால், விடுதலைப் புலிகள் இருக்கின்ற போது அவர்களுக்குள் எந்தவொரு முரண்பாடும் இருந்திருக்கவில்லை. சம்பந்தன் எப்போது தலைமைத்துவத்தை ஏற்றாரோ, அதன் பின்னர்தான் அனைத்து முரண்பாடுகளும் கருக்கொண்டது. ஒவ்வொருவராக வெளியேறினர். இப்போது நடைபெறுகின்ற விடயங்களை நோக்கினால், இருப்பவர்களையும் எப்படி வெளியேற்றலாம் என்று திட்டமிட்டு பணியாற்றுவதுபோல்தான் தெரிகின்றது. ஏனெனில், கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறிந்தால் முதலில் உடையப் போவது அவர்களின் வீடுதான்.

# உள்ளக பொறிமுறையில் நம்பிக்கையின்மையால் சர்வதேச பொறிமுறை!

- அலசுவது இராஜதந்திரி -



இலங்கையில் ஆயுதப்படை உயர் அதிகாரிகளில் கூடுதலான கல்வி தகைமையுடையவரே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளராக பணியாற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கலாநிதி ஜயந்த கொலம்பகே.

மனிதாபிமான பிரச்னைகள் பற்றி அட்மிரல் கலாநிதி ஜயந்த கொலம்பகே ஜனாதிபதி ஊடக மையத்தால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மகாநாட்டில் பங்குபற்றி கருத்து வெளியிட்டபோது இலங்கையில் உள்ளகப் பொறிமுறை மூலமாக சிக்கலான மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு தீர்வுகளை எட்ட முடியும்.

எனவே உள்நாட்டு பிரச்னைகளை தீர்க்க சர்வதேச பொறிமுறை அவசியமற்றதெனக் குறிப்பிட்டிருந்தார். எந்தவொரு தன்னாதிக்கமுள்ள தேசமும் தனது உள்நாட்டு பிரச்னைகளை வெளி உலகத்தலையீடுகளற்ற முறையில் தீர்க்கவே முன்வரும். ஆனால், இலங்கையில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று பன்னிரெண்டு வருடங்களாகியும் முக்கியமான மனிதாபிமானப் பிரச்னைகள் தீர்க்கப்படாமலேயே இருந்து வருகின்றன.

வடக்கு - கிழக்கின் மனிதாபிமானப் பிரச்னைகள் யுத்தம் முடிவுக்கு வந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே நிலவி வரக் காணப்படுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம், வடக்கு - கிழக்கில் நில அபகரிப்பு, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக தடயங்களை அழித்தல் போன்ற நடவடிக்கைகள் நீண்ட நெடுங்காலமாகவே இருந்து வருகின்றன.

இதன்காரணமாக யுத்தம் முடிவுற்ற காலத்திலிருந்து பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு மக்கள் தீர்வுகளை எட்டுவதற்கான உள்ளக பொறிமுறையில் நம்பிக்கை இழந்தவர்களாக சர்வதேச பொறிமுறையை தமது மனிதாபிமானப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வேண்டி நிற்கின்றனர்.

வெளியுறவு செயலாளர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே இலங்கையின் உள்விவகாரங்களில் வெளி உலக தலையீடு இருப்பதற்கு பதினைந்து நாடுகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார். ஆனால், மறுபுறத்தே அட்மிரல் குறிப்பிட்ட நாடுகளில் அநேகமானவை பலவீனமான ஜனநாயக அமைப்பைக் கொண்டவையாகவும், மனித உரிமைகள் மீறல்களோடு சம்பந்தப்பட்டவையாகவும் இருக்கின்றன.

இந்த நாடுகளில் சீனா , ரஷ்யா, வட கொரியா, ஈராக், பாகிஸ்தான் , வெனிசுவெலா என்பவை குறிப்பிடத்தக்கவை.

உள்ளகப் பொறிமுறையுடன் மனிதாபிமானப் பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று அரச தரப்பு குறிப்பிடுகின்றது. அப்படியானால், யுத்தம் முடிவுற்ற மறுகணமே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற விடயங்களை இலங்கை அரசு கால தாமதங்களுக்கு இடம் தராது கையாண்டிருக்க வேண்டும். அத்துடன், மூன்று தசாப்தகால வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இன நல்லிணக்கத்தை ஆரோக்கியமான முறையில் மீளவும் கட்டியெழுப்பியிருக்கவும் வேண்டும்.

யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் வடக்கு - கிழக்கு மக்களும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நிறையவே எதிர்பார்ப்புகளை கொண்டிருந்தனர். ஆனால், அவர்களின் நம்பிக்கைகளை தவிடுபொடியாக்கும் விதத்திலேயே இலங்கை அரசு நடந்து கொண்டிருந்தது.


இலங்கை அரசின் அடாவடித்தனத்தை தெளிவாக எடுத்துக்காட்டுவது போலவே அண்மையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த நடந்து கொண்ட விதம் புலப்படுத்தியிருந்தது. சிறைக்கைதிகளின் புனர்வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தமது மனம்போன போக்கில் தமிழ் அரசியல் கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலையில் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தியுள்ளார்.

“ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்“ என்பது போல இலங்கை அரசின் சிறுபான்மை மக்கள் மீதான அனைத்துவிதமான அச்சுறுத்தலுக்கும் நல்ல உதாரணமாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறையில் நடந்து கொண்ட விதம் காணப்படுகின்றது.

இத்தகைய பின்னணியில் வடக்கு-கிழக்கு மக்கள் இலங்கை அரசு நேர்த்தியான முறையில் தமது மனிதாபிமான பிரச்னை களுக்கு தீர்வு காணும் என்று ஒரு போதும் கருதமாட்டார்கள்.

இதன் காரணமாகவே பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பவை தொடர்பாக வடக்கு-கிழக்கு மக்கள் உள்ளகப் பொறிமுறையின்றி, சர்வதேச அணுகு முறைகளை நாடி நிற்கின்றனர் என்பதை வெளியுறவு செயலாளர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே அறிந்து கொள்ள வேண்டியவராகின்றார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செப்ரெம்பர் - 18 சனிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 02
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரயோதசி



## இன்றைய ராசிபலன்

18.09.2021

**மேடம்** முடிந்துவிடும் என நினைத்த விஷயத்தில் தடைகள் வரலாம். முயற்சிகளால் முன்னேற்றம் அதிகரிக்கும் நாள். பரபரப்பு கூடும். போன் மூலம் எதிர்பாராத நல்ல செய்தி வரும்.

**இடபம்** பல நாட்கள் விரும்பிய விஷயம் இன்று நடந்து மகிழ்வீர்கள். பெற்றோரின் உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உடல் நலம் சீராகி உற்சாகம் ஏற்படுத்தும். சுகம் கூடும்.

**மிதுனம்** தவறாகப் பேசியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். வாழ்வில் முன்னேற நியாயமான புதிய வழியைக் கையாள் வீர்கள். பணியாளர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். உழைப்பு கூடும்.

**கடகம்** விரும்பிய விஷயம் கிடைக்கும். பணக்கவலை தீரும். மெயில்கள் மூலம் சந்தோஷ அதிர்ச்சி தரும் செய்தி வரும். வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வீர்கள்.

**சிம்மம்** பணியிடத்தில் சாதனைகள் செய்து காட்டுவீர்கள். வரவேண்டிய பாக்கித்தொகை வசூலாகும். வருமானம் திருப்தி தரும். மற்றவர்கள் சார்பில் நீங்கள் கொடுத்திருந்த வாக்கால் சிரமம் ஏற்படும்.

**கன்னி** வம்பு பேசாதீர்கள். எந்தப் பெரிய முடிவும் எடுக்க வேண்டாம். கவலைகள் சற்றுக் குறையும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நட்பால் நல்ல விஷயம் நடைபெறும். நன்மைகள் ஏற்படும்.

**துலாம்** வாக்குறுதியைக் காப்பாற்ற நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். உடன் பிறந்தவர்கள் வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். கட்டடப்பணி நல்ல விதமாக நடைபெறும்.

**விருட்சிகம்** வருமானம் சீராகி உற்சாகப்படுத்தும். ஆன்மிக ஈடுபாடு வரும். அனுபவம் மிக்கவர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பர். நண்பர்கள் ஆதரித்து உதவுவார்கள். சிறு தாமதங்கள் நேரும்.

**தனுசு** அரசு அதிகாரிகள் சில விஷயங்களை முடித்துக் கொடுப்பர். வருங்காலத்திற்காக சிறிது சிறிதாகச் சேமிக்க முற்படுவீர்கள். புதிய எலக்ட்ரோனிக் பொருள் சேர்க்கை ஏற்படும் நாள்.

**மகரம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மனம் நிறையும். தந்தை உடல் நலனில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். புகழ் மிக்கவர்களின் புதிய ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்** பூமி யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பணி சம்பந்தமாக மாற்றங்கள் பற்றி செய்தி வரும். அடகு வைத்த வீடு, நகைகளை மீட்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்** விரும்பிய விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சிக்கு வித்திடுவீர்கள். யாரையும் விரோதியாக நினைக்க வேண்டாம். சுறுசுறுப்பு மீளும்.

# ஜெயலலிதா மரணம்: விசாரணை அறிக்கை ஒரு மாதத்தில் தாக்கல்

சென்னை, செப். 18

ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணையை மேற்கொண்டுவரும் ஆறுமுக சாமி ஆணையம் இடைக்காலத் தடையை நீக்கினால், விசாரணை அறிக்கையை ஒரு மாதத்தில் தாக்கல் செய்யப் படும் என உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. விசாரணையில் இருந்து விலக்கு கோரிய அப்போலோ வழக்கும் அடுத்த வாரம் விரிவாக விசாரிக்கப் படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மறைந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணையை நடத்த ஓய்வு பெற்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்நிலையில், ஆறுமுகசாமி ஆணையம் விசாரணைக்கு தடைவிதிக்கக் கோரி அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.



இந்நிலையில், ஆறுமுகசாமி ஆணைய விசாரணைக்கு இடைக்கால தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததால், அந்த இடைக்கால தடையை நீக்கக் கோரி தமிழக அரசு சார்பில் இடையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த இரண்டு மனுக்கள் மீதான விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதி அப்துல் நசீர் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, ஆறுமுகசாமி ஆணையம் ஏற்கனே 115 சாட்சிகளை விசாரித்திருப்பதாகவும், இன்னும் 4 சாட்சிகளை மட்டுமே ஆணையம் விசாரிக்க வேண்டி இருப்பதாகவும், தடையை நீக்கினால் ஒரு மாதத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுவிடும் என்றும் மூத்த வழக்குரைஞர் ரஞ்சித் குமார் வாதிட்டார். இதை கேட்டு பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், வழக்கு விசாரணை அடுத்த வாரம் 23 ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர். அப்போது அப்போலோ மருத்துவமனை தாக்கல் செய்த மனுவும் விசாரணைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு அப்போலோ மருத்துவமனை மருத்துவர்கள் ஜெயலலிதா மரணம், தொடர்பாக ஆறுமுகசாமி ஆணையம் முன்பு விசாரணைக்கு ஆஜராகுவதில் இருந்து விலக்கு அளித்தும், ஜெயலலிதா மரணம் தொடர்பாக ஆறுமுகசாமி ஆணைய விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும் உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. இதனை தொடர்ந்து ஆறுமுகசாமி ஆணைய விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடையை விலக்கக்கோரி தமிழ் நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனு தாக்கல் செய்தது.

# புதிய ஆளுநராக ரவி இன்று பதவியேற்பு; விமான நிலையத்தில் முதல்வர் வரவேற்பு

சென்னை, செப். 18,

தமிழ்நாட்டின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஆர். என். ரவி நேற்று முன்தினம் இரவு சென்னை விமான நிலையம் வந்தடைந்தார். அவரை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது அமைச்சரவை சகாக்களோடு நேரில் சென்று வரவேற்றார்.

தமிழ்நாடு ஆளுநராக இருந்த பன்வாரிலால் புரோகித் அண்மையில் பஞ்சாப் மாநிலத்துக்கு மாற்றப்பட்டார். அவருக்கு பதிலாக தற்போது நாகாலாந்து ஆளுநராக இருக்கும் ஆர்.என். ரவி. தமிழ்நாட்டின் ஆளுநராக அறிவிக்கப்பட்டார்.

உளவுத்துறையில் பழுத்த அனுபவம் பெற்ற முன்னாள் ஐபிஎஸ் அதிகாரியான ரவியின் நியமனம் பற்றி முதலில் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி சந்தேகம் கிளப்பினார். விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனும் இந்த ஆளுநர் நியமனத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.



இவ்வாறு சென்னை வருவதற்கு முன்பே அரசியல் வட்டாரத்தை அதிர்வுபடுத்திய ஆளுநர் ரவி நேற்றுமுன்தினம் இரவு சென்னை விமானநிலையம் வந்தார். அவரை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, கே.என்.நேரு உள்ளிட்டோர் வரவேற்றனர்

தமிழகத்தின் 25ஆவது ஆளுநராக வந்திருக்கும் ஆர்.என். ரவிக்கு சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி இன்று பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

# தமிழகத்தில் 3 கோவில்களில் அன்னதானம் 3 நேரமும் உணவை வழங்குவதற்கு திட்டம்

## முதலமைச்சர் ஸ்டாலின் ஆரம்பித்துவைத்தார்

சென்னை, செப். 18,

திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி ஆகிய 3 கோவில்களில் நாள் முழுக்க அன்னதானம் வழங்கும் பணியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தமிழக சட்டசபையில் இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில் பல்வேறு புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

அதன்படி திருச்செந்தூர் முருகன் கோவில், சமயபுரம் மாரியம்மன் கோவில், திருத்தணி சுப்பிரமணியசாமி கோவில் ஆகிய 3 கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இந்தநிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலிக்காட்சி வாயிலாக, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அந்த 3 கோவில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை நேற்று தொடங்கி வைத்தார்.

இறையருள் பெற கோவில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு உணவளிப்பதே அன்னதான திட்டமாகும். தற்போது இத்திட்டத்தில் 754 கோவில்களில் மதியவேளை அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. முந்தைய காலகட்டங்களிலும் கோவில்கள் மூலம் ஏழைகளுக்கு உணவளிக்கும் நடைமுறை இருந்து வந்துள்ளது. இதனை பின்பற்றி கொரோனா பெருந்தொற்று காலத்தில், ஏழை எளிய மக்களின் பசியை போக்கும் விதமாக கோவில்கள் சார்பாக 44 இலட்சம் பேருக்கு உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினால் தொடங்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டத்தின் வாயிலாக இந்த 3 கோவில்களிலும் நாள்தோறும் சுமார் 7,500 பக்தர்கள் பயனடைவார்கள். இந்த அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்கு காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை உணவு பரிமாறப்படும்.

# அரசியல் கைதிகளை நான் தொடவேயில்லை

## குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் லொஹான்



கொழும்பு, செப். 18

**சிறைச்சாலைகளின் வளர்ச்சிக்காக சிறைச்சாலைகள் அமைச்சராக நிறையப் பணிகளை ஆற்றியுள்ளேன். அப்படி செயல்பட்ட நான், முட்டாள்தனமான செயலைச் செய்வேன் என நம்புகிறீர்களா என கேட்கிறார் முன்னாள் சிறைச் சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த.**

தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் அவர் மறுத்துள்ளார். தன் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்படும் எந்த சம்பவமும் நடக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற முறையில், எந்தச் சிறையிலும் எந்த நேரத்திலும் செல்ல எனக்கு யாரிடமும் அனுமதி தேவையில்லை. என்னிடம் 29 சிறைச்சாலைகள் மற்றும் 2 மறுவாழ்வு மையங்கள் இருந்தன. அங்கு நான் பகல் அல்லது இரவு எந்த நேரத்திலும் செல்லலாம்.

நான் யாரிடமும் சொல்லாமல் போகிறேன். ஏனென்றால் இவற்றில் என்ன நடக்கிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

நான் சிறை அமைப்பை முழுமையாக மாற்றினேன். போதை மருந்து விநியோகம் நிறுத்தப்பட்டது. சிறைக் கும்பல்களிடையே நடந்த கொலைகள் நிறுத்தப்பட்டன. நான் அத்தகைய நபர்களை ஒரு தனியான இடத்துக்கு மாற்றினேன். பாதுகாப்பு காரணங்களுக்காக அவற்றைச் சொல்ல முடியாது. செல்போன்கள் மற்றும் பிற பொருள்கள் சிறைக்குள் கொண்டு வருவது நிறுத்தப்பட்டது.

எனக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் நான் மறுக்கிறேன். அந்த வார இறுதியில் நான் அனுராதபுரம் சிறைச்சாலைக்கும், மற்ற சிறைச்சாலைகளுக்கும் சென்றேன்.

நான் அத்துமீறி சிறைக்குள் நுழையவில்லை. நான் எந்த கைதியையும் மிரட்டவில்லை. வெலிக்கடை சிறைச்சாலையை ஹொரணைக்கு மாற்ற எனக்கு யோசனை இருந்தது. கைதிகளை சரியான பாதையில் கொண்டு செல்வதற்கான அனைத்துத் வசதிகளையும் கொண்ட சிறைச்சாலையாக மாற்ற விரும்பினேன். சிறைகளில் இப்படி ஒரு முழுமையான மாற்றத்தை ஏற்படுத்த முயலும் நான் இவ்வளவு முட்டாள்தனமான காரியத்தைச் செய்திருப்பேன் என்று நினைக்கிறீர்களா?

நான் வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றபோதிலும், தூக்கு மேடையை பார்க்க யாரையும் அழைத்துச் செல்லவில்லை. ஞாயிற்றுக்கிழமை இரவு அனுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்றேன். ஆனால் அங்கு எந்த கைதிகளையும் தொடவில்லை. குற்றச்சாட்டுக்களில் சொல்லப்படுவதை போல அப்படி எதுவும் நடக்கவில்லை. இதுபற்றிய உண்மையை ஜனாதிபதியும் பிரதமரும் புரிந்துகொள்வார்கள். நான் மாணிக்கம் மற்றும் நகை தொழில்துறை இராஜாங்க அமைச்சராக நீடிப்பேன்- என்றார்.



இலங்கை-காரைக்கால் கப்பல் சேவை

# புதுச்சேரி முதல்வருடன் வியாழேந்திரன் பேச்சு!

சென்னை, செப். 18

இலங்கை மற்றும் இந்தியா நாட்டு மீனவர்கள் பிரச்னைக்கு சுமூகத் தீர்வு கணும் வகையிலும், நல்லுறவை வளர்ப்பது தொடர்பாகவும் இலங்கை-காரைக்கால் இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்தை வடக்கு- கிழக்கை மையப்படுத்தி ஆரம்பிப்பது பற்றியும் புதுச்சேரி முதலமைச்சர் என். ரங்கசாமியுடன் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் பிரதமரின் இணைப்புச் செயலர் செந்தில் தொண்டமான் ஆகியோர் பேச்சு நடத்தியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் புதுச்சேரி போக்குவரத்து அமைச்சர் பிரியங்கா, சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மேலும், இந்தியா சென்றுள்ள இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கிராமிய அபிவிருத்தி, மற்றும் விவசாயம், கைத்தொழில் சார் முதலீடு மற்றும் கால்நடை துறை சார் மேம்பாடு தொடர்பான விசேட பல கலந்துரையாடல்களில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# அரசுடனான பேச்சு தோல்வி

## ஆசிரியர் தொழிற்சங்க போராட்டம் தொடரும்



கொழும்பு, செப். 18

கல்வியமைச்சுக்கும் ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பேச்சு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

எவ்வாறாயினும், நேற்று முன்தினம் இடம்பெற்ற அந்த பேச்சு தோல்வியடைந்துள்ளதாக இலங்கை ஆசி ரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எனவே, தங்களது பிரச்னைக்கு முழுமையான தீர்வு கிடைக்கும்வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் தேங்கும் கொரோனா சடலங்கள்!

வவுனியா, செப். 18

வவுனியாவில் கொவிட் தொற்று காரணமாக மரணமடைந்த 22 பேரின் சடலங்கள் தற்போது தேங்கி உள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கோவிட் தொற்று பரவல் அதிகரித்துள்ளதுடன், இறப்புக்களும் அதிகரித்து வருகின்றன. கொவிட் தொற்று காரணமாக மரணமடைபவர்களின் உடல்கள் சுகாதார நடைமுறைகளுடன் வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மின் மயானத்திலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த மின் மாயானமானது கடந்த நான்கு தினங்களாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதன் திருத்த வேலைக்குரியவர்கள் கொழும்பில் இருந்து வருவதனால் தாமத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் கொவிட் தொற்றால் மரணமடைந்த 4 பேரின் சடலங்கள் அடக்கம் செய்வதற்காக நேற்று முன் தினம் ஒட்டமாவடிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கடந்த 5 தினங்களுக்கு முன்னர் மரணமடைந்தவர்கள் உட்பட 22 பேரின் சடலங்கள் தற்போது தகனம் செய்யப்படாத நிலையில் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. நேற்று இரண்டு சடலங்கள் தகனத்துக்காக கெக்கிராவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஏனைய சடலங்கள் தேக்க நிலையில் உள்ளன.

மின் மாயானம் திருத்தப்பட்டாலும் நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக 6 சடலங்களையே எரியூட்ட முடியும். குறித்த சடலங்களை முழுமையாக தகனம் செய்ய ஐந்து தினங்கள் தேவையாகவுள்ள நிலையில் தொடர்ந்தும் இறப்புக்கள் ஏற்பட்டால் தகனம் செய்வதில் மேலும் நெருக்கடி நிலை ஏற்படும் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் சமூகப் பொறுப்புடன் கொவிட் தொற்றில் இருந்து விடபட சுகாதாரத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பின்பற்றுவதுடன், அரசாங்கத்தினதும், சுகாதரப் பிரிவினரதும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# இலங்கைக்கு 10 இலட்சம் சினோவக் தடுப்பூசிகளை வழங்குகின்றது சீனா!

கொழும்பு, செப். 18

இலங்கைக்கு 10 லட்சம் சினோவக் தடுப்பூசிகளை வழங்க சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிவிப்பை சீனத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சீன தூதரகத்தின் உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொவிட் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தடுப்பூசி செலுத்தும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க உதவும் வகையில் இந்த தடுப்பூசிகள் இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அ’புரம் சிறையில் கைதிகளுக்கு அச்சுறுத்தல் மனித உரிமை ஆணைக்குழுவும் விசாரணை

கொழும்பு, செப். 18

வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுயாதீன விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதன் 3 பிராந்திய ஒருங்கிணைப்பு அதிகாரிகள் ஊடாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே உள்ளிட்ட குழுவினர் வெலிக்கடை மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளுக்கு சென்று அங்குள்ள தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

(அ)

# பண்ணை உரிமையாளர் ஒருவர் நாயாறு பகுதியில் திடீர் மரணம்!

முல்லைத்தீவு, செப். 18

முல்லைத்தீவு மாவட்டம் நாயா றுப் பகுதியில் நேற்று முன் தினம் மாலை பண்ணை உரிமையாளர் ஒருவர் திடீரென மரணம் அடைந்தார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த 65 வயது மதிக்கத் தக்க நடராஜா சுந்தரம் என்ற நபர் நேற்று முன் தினம் மாலை தனது பண்ணைப் பகுதியில் திடீர் உடல் நலப் பாதிப்புக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

அவரது சடலம் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

குறித்த நபர் கடந்த புதன் கிழமை (உயிரிழப்பதற்கு முதல் நாள்) கொரோனா 02 ஆவது தடுப்பூசியை செம்மலை பாடசாலையில் பெற்றுக்கொண்டவர் என்று நாயாறு பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர், முல்லைத்தீவில் பல பண்ணைகளை வைத்திருப்பதாகவும் பெறுமதி வாய்ந்த மாடுகள் உட்பட்ட கால்நடைகளை வைத்திருப்பதுடன் பலருக்கு வேலை வாய்ப்புக்களையும் வழங்கி வந்தவர் என்றும் கிராமத்தவர்கள் தெரிவித்தனர்.

# இராஜாங்க அமைச்சரை உடனடியாக கைதுசெய்க!



## சஜித் அணி முறைப்பாடு

கொழும்பு, செப். 18

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவை உடனடியாக கைதுசெய்யுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் ஊடாகவே மேற்படி வலியுறுத்தலை அக்கட்சி விடுத்துள்ளது.

அத்துடன், சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பு, சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடொன்றை முன்வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெ. தயாரிப்பு துப்பாக்கியுடன் திருமலையில் ஒருவர் கைதானார்

திருமலை, செப். 18

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எத்தாபெந்திவெவ பகுதியில் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட சொட்கன் என்ற ழைக்கப்படும் துப்பாக்கி ஒன்றுடன் சந்தேகநபர் ஒருவரை நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த துப்பாக்கி மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மொரவெவ பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி வசந்த சந்ரலால் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாக சென்ற குழுவினர் அவரது வீட்டை சோதனையிட்ட போது சொட்கன் துப்பாக்கியை மீட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் ரொட்டவெவ - எத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# வடக்கில் 159 தொற்றாளர்கள் கடந்த வியாழன் அடையாளம்

## 7 பேர் கோவிட்-19 நோயினால் மரணம்

யாழ்ப்பாணம், செப். 18

வடக்கு மாகாணத்தில் செப்ரெம்பர் மாதத்தில் நேற்று முன்தினம் தொற்றாளர்கள் மற்றும் உயிரிழந்தோர் எண்ணிக்கை வீழ்ச்சி நிலை ஏற்பட்டுள்ளமை சுகாதாரத்துறையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாகாணத்தில் 159 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 7 பேர் உயிரிழந்தனர்.

செப்ரெம்பர் மாதத்தின் முதல் 16 நாள்களில் வடக்கு மாகாணத்தில் 6 ஆயிரத்து 667 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதுடன் 240 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு மாகாணத்தில் ஒகஸ்ட் மாதத்தில் 228 பேர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்த நிலையில் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 16 நாள்களில் 240 பேர் உயிரிழந்தனர்.

சுகாதாரத் துறையின் நேற்றைய அறிக்கையின் படி, நேற்று முன் தினம் யாழ். மாவட்டத்தில் 36 தொற்றாளர்களும் வவுனியா மாவட்டத்தில் 61 தொற்றாளர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 39 தொற்றாளர்களும் முல்லைத்தீவில் 18 தொற்றாளர்களும் மன்னாரில் 5 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் 2 பேரும் வவுனியா மாவட்டத்தில் 3 பேரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒருவரும் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்தனர். (அ)





# யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட தகவல் தொழில்நுட்ப கூடம் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஐக்கிய அமெரிக்க பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்டு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குக் கையளிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப கூடத்தின் திறப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ கலாநிதி இ.சுரேந்திரகுமாரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தகவல் தொழில் நுட்ப கூடத்தைத் திறந்து வைத்தார்.

முன்னாள் மருத்துவ பீடாதிபதியும், சத்திர சிகிச்சை நிபுணருமான பேராசிரியர் எஸ். ரவிராஜ், மருத்துவ பீட விரிவுரையாளர்கள், முன்னாள் மாணவர்கள் உட்படப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நாட்டின் தற்போதைய கோவிட்19 சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த நிகழ்வு மிகவும் குறைந்தளவானர்களுடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. (அ-3)

# யாழில் காணி விடுவிப்பு என்று மீண்டும் போலி வாக்குறுதியா?

## சிவில் அமைப்பு கேள்வி

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தனியார் காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் மேலதிக வெளிப்படைத்தன்மையுடன் கூடிய செயன்முறையையும் போதிய கால அவகாசத்தையும் வழங்க வேண்டும் என காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி (PARL) கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி நேற்று கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாண அரசாங்க அதிபரால் ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி 2021 அன்று வெளியிடப்பட்ட முப்படையினர் மற்றும் பொலிஸாரின் பாவனையிலுள்ள தனியார் காணிகள் காரணமாக மீள்குடியமராத குடும்பங்களின் விவரங்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக வெளியிடப்பட்ட கடிதம் தொடர்பில் எமக்கு எழுந்துள்ள கரிசனைகளை இக்கடிதம் மூலம் முன்வைக்கின்றோம்.

இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாக நிலத்தை இழந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமது நிலத்தை மீளப்பெறும் எதிர்பார்ப்புடன் பல அரச அதிகரிகளிடம் தமது நிலம் தொடர்பான தகவல்களை தொடர்ந்து வழங்கி வந்துள்ளனர். பல வருடங்களாக எவ்வித பிரதிபலனும் இல்லாமல் ஓர் அரசாங்க அலுவலகத்தில் இருந்து வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு மாறி மாறி சென்று தமது காணி தொடர்பான தகவல்களை ஒப்படைத்த காணிகளை இழந்த மக்கள் விரக்தியான ஒரு மனநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் இம்முறை தகவல் வழங்குமாறு வெளியிடப்பட்டுள்ள இக்கடிதமும் போலியான ஒரு வாக்குறுதி என அவர்கள் நினைக்கின்றார்கள்.

அத்துடன் உங்களது கடிதத்தில் ஆவணங்களை ஒப்படைப்பதற்கான இறுதித் திகதி குறிப்பிடப்படவில்லை. ஆனால் யாழ். மாவட்ட செயலக வலைத்தளத்தில் இறுதித் திகதியாக செப்ரெம்பர் 15 குறிப்பிடப்பட்டுள்ளது. இது உங்களது கடிதம் வெளியிடப்பட்ட திகதியின் அடிப்படையில் பார்க்கும் போது ஆவணங்களை சமர்ப்பிக்க மக்களுக்கு ஒரு மாத கால அவகாசம் கூட வழங்கப்படவில்லை.

நாடளாவிய ரீதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில் போக்குவரத்து தொடர்பான மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. ஆகவே மக்கள் தமது மூல ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் நாட்டுக்கு வெளியே வசிக்கும் மக்கள் ஒரு மாதத்துக்கு குறைந்ததொரு காலத்தில் இந்த ஆவணங்களை சமர்ப்பிப்பது என்பது இயலாத ஒரு விடயமாக கருதப்படுகின்றது. இத்தகவல்களை பெறுவதற்கான நோக்கம் தொடர்பில் ஒரு தெளிவின்மை காணப்படுவது மக்கள் மத்தியில் இச்செயன்முறை தொடர்பில் ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளதுடன் இராணுவம் மூலம் புதிதாக நில ஆக்கிரமிப்புக்கள் இடம்பெறுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இக்கடிதமானது இலங்கைக்கு வெளியே வசிக்கும் மக்கள் தமது தகவல்களை எவ்வாறு சமர்ப்பிப்பது என கூற தவறியுள்ளது.

தற்போது யாழ்ப்பாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் காணப்படும் நிலங்களின் உரிமையாளர்கள் பலர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.

ஆகவே, எமது கோரிக்கையானது அதிகாரிகள் மக்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களை நில விடுவிப்பு தொடர்பில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று ஆராய வேண்டும். அத்துடன் மக்கள் தகவல்களை வழங்குவதற்கான கால எல்லை நீடிக்கப்பட வேண்டும். கால அளவு நீடிக்கப்படால் மக்கள் தகவல்களை திரட்ட போதிய கால அவகாசம் கிடைப்பதுடன் எந்தவொரு குடும்பமும் இச் செயன்முறையிலிருந்து தவறவிடப்படாமல் இருப்பதும் உறுதி செய்யப்படும்.

உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பங்கேற்புடன் இந்த செயல்முறை பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் தேவையான தகவல்களை வழங்குவதற்கு வசதியாகவும் மேலும் வெளிப்படையான மற்றும் ஒத்துழைப்பு செயல்முறையை உருவாக்கவும் நாங்கள் உங்களை வலியுறுத்துகிறோம்.

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணி என்ற ரீதியில் நாம் நிலங்களை அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்குத் திருப்பித்தர அரசாங்கம் மேற்கொள்ளும் உண்மையான முயற்சிகளுக்கும் வடக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த அனைத்து சமூகங்களுக்கும் நில உரிமையை உறுதி செய்யும் செயற்பாடுகளுக்கும் எமது முழு ஆதரவை வழங்குவோம் என்பதை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (அ-3)

# நாம் இறந்தால் சாட்சியங்கள் அழிந்துவிடும் அதனையே அரசாங்கம் எதிர்பார்க்கின்றது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு



மன்னார், செப். 18

**நாங்கள் இறந்துவிட்டோம் என்றால் சாட்சியங்கள் அழிந்து விடும். அதனையே அரசாங்கம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் சங்கத்தின் இணைப்பாளர் மனுவல் உதயச்சந்திரா தெரிவித்துள்ளார்.**

ஆகவே, இலங்கை இராணுவத்தையோ அல்லது அரசாங்கத்தையோ நாங்கள் நம்பவில்லை. இதனால் எங்களுக்கு சர்வதேசம் ஒரு நல்ல பதிலை வழங்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மனுவல் உதயச்சந்திரா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனிவா 48 ஆவது அமர்வு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் நாங்கள் ஜெனிவாவிடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு தீர்வு தேவை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக அம்மாக்கள் இன்று சுமார் 1500 நாட்களாக வீதியில் இறங்கிப் போராடி வருகின்றனர்.

நாங்கள் வீதியில் இறங்கி எமது உறவுகளை மீட்கப் போராடுவது உலக நாடுகளுக்கே தெரியும். நாங்கள் நீதிக்காக போராடி வருகிறோம் தவிர நிதிக்காக போராடவில்லை.

மன்னார் மாவட்டத்தில் முப்படையை நம்பியே நாங்கள் இருந்தோம். ஒன்றும் நடக்காது, எமது பிள்ளைகள் பாதுகாப்பாக இருப்பார்கள் என்று நம்பி இருந்தோம்.

இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று இதுவரை எந்ததொரு தகவலும் இல்லை.

ஆகவே, நாங்கள் இறப்பதற்கு முன் எமது பிள்ளைகளின் நிலை என்ன என்று எமக்கு தெரிய வேண்டும். எமது பிள்ளைகளின் நிலை என்ன? அவர்களை எங்கே வைத்துள்ளீர்கள்? அவர்கள் இருந்தால் அவர்களை விடுதலை செய்ய உதவுங்கள் என்றுதான் இன்று உலக நாடுகளிடம் கேட்கின்றோம்.

எமது பிள்ளைகளை வீதியில் நின்று தேடுகின்ற அம்மாக்களாக நாங்கள் இருக்கின்றோம். எங்களின் கண்ணீரை உலக நாடுகள் பார்த்துக் கொண்டு இருக்கின்றன.

ஜெனிவா அமர்வில் எமக்கு ஒரு நல்ல முடிவு கிடைக்க வேண்டும். இலங்கை இராணுவத்தையோ அல்லது அரசாங்கத்தையோ நாங்கள் நம்பவில்லை.

எங்களுக்கு சர்வதேசம் ஒரு நல்ல பதிலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜெனிவா அமர்வில் கோரிக்கையாக விடுக்கின்றோம்.

எங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்க வேண்டும். எங்களின் காலங்கள் இன்னும் அதிகம் இல்லை. நாங்கள் இறந்து விட்டோம் என்றால் சாட்சியங்கள் அழிந்து விடும். அதனையே அரசாங்கம் பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

ஓர் அம்மா உயிருடன் இருக்கும் வரை பிள்ளைகளுக்கான போராட்டம் நடந்து கொண்டு இருக்கும்-என்றார்.



# விடுதலையான அரசியல் கைதி நேற்று வீடு வந்து சேர்ந்தார்

முல்லைத்தீவு, செப். 18

கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட அரசியல் கைதி முல்லைத்தீவு மாவட்டம் உடையார்கட்டில் உள்ள தனது வீட்டுக்கு நேற்று காலை வந்து சேர்ந்தார்.

இறுதி யுத்தத்தின்போது இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற பின்னர் விடுதலையாகி, மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் கைது செய்யப்பட்டு கடந்த 12 வருடங்களாக வழக்கு தாக்கல் செய்யப்படாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நடேசு குகநாதன் நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அவர் நேற்று காலை தனது வீட்டை வந்தடைந்தார் என அவரது குடும்பத்தார் தெரிவித்தனர்.

(அ)

# 15 முதல் 19 வயதுக்குட்பட்டவர்களுக்கு பைசர் தடுப்பூசியை வழங்க பணிப்பு

கொழும்பு, செப். 18

15 தொடக்கம் 19 வயது வரையான மாணவர்களுக்கு பைசர் கொவிட்-19 தடுப்பூசியை வழங்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

இந்த தகவலை இராணுவத் தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற கோவிட் - 19 கட்டுப்பாட்டுச் செயலணியின் கூட்டத்தில் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# அரசு சார்பு ஆசிரியர் சங்கங்களினால் பொலிஸில் பொய்யான முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 18

தொழிற்சங்க நடவடிக்கையின்போது இணையவழிக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களை அச்சுறுத்தும் வாய்ப்பு இருப்பதாக பொலிஸ் வெளியிட்ட அறிக்கைக்கு ஆசிரியர் சங்கங்கள் நேற்று பதிலளித்தன.

எந்தவோர் ஆசிரியரும் இன்னோர் ஆசிரியரை அச்சுறுத்தவோ அல்லது அழுத்தத்தை ஏற்படுத்தவோ இல்லை என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், அரசு சார்பான ஆசிரியர் சங்கங்கள் பல்வேறு பொய்களைக் கூறி பொலிஸில் முறைப்பாடு செய்வதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

நேற்று காலை சமூக ஊடகங்களில் தனது கருத்துக்களை வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# இணையத்தளத்தின் உரிமையாளர் கைது

கொழும்பு, செப். 18

பெண்கள் மற்றும் சிறுமிகளை பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்துவந்த ஆபாச இணையத்தள உரிமையாளர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ இதனைத் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர் இரத்தினபுரி-கலவானை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர் கூறினார்.

(அ)

# கட்டுநாயக்க விமான நிலைய தாக்குதல் மிரட்டல்! போலியானது என்கிறார் பாதுகாப்பு செயலாளர்!!

கொழும்பு, செப். 18

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் பாணியில் கிடைக்கப் பெற்றதாகக் கூறப்படும் போலி மின்னஞ்சல் தொடர்பில் பொதுமக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்ட பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, நாட்டிலுள்ள சகல பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கப் பிரிவினர்களும் தற்போதுள்ள அமைதியை சீர்குலைக்க எவருக்கும் வழி வகுக்காமல் தத்தமது கடமைகளை திறம்பட முன்னெடுத்து வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.



கட்டுநாயக்க விமான நிலையம் தாக்கப்படும் என்று பங்களாதேஷ் இராணுவ இணையத் தளத்தில் இருந்து குறித்த மின்னஞ்சல் வந்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. எனினும், பங்களாதேஷ் இராணுவ இணையத் தளம் 'ஹக்' செய்யப்பட்டுள்ள தாகவும், இந்த மின்னஞ்சல் போலியானது என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், அச்சுறுத்தல் பாணியில் கிடைக்கப் பெற்றதாகக் கூறப்படும் போலி மின்னஞ்சல் தொடர்பில் பொதுமக்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் தனிப்பட்ட நலனை எதிர்பார்த்து கைக்குண்டொன்றை வைத்த இரண்டு சந்தேக நபர்கள் தற்போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொடிகாமம் இளைஞர் விபத்தினாலேயே மரணம்

## பிரேத பரிசோதனையில் முடிவாகியது

யாழ்ப்பாணம், செப். 18

கொடிகாமம் காரைக்காட்டு வீதியில் விபத்தினாலேயே இளைஞர் உயிரிழந்தார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் முடிவாகியுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட பணிப்புக்கு அமைய யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை நிபுணர் மேற்கொண்ட பரிசோதனையில் அடிப்படையில் குறித்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

விபத்தினால் ஏற்பட்ட தாக்கத்தினாலேயே இதயம் வெடித்து அவர் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து அவருடைய இறுதி நிகழ்வுகள் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முன்னதாக தமது பிள்ளையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பெற்றோரால் பொலிஸ் நிலையில் முறையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கமைய பாடசாலைகளை ஆரம்பிப்பது அவசியமானதாகும்

கொழும்பு, செப். 18

பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்ட பின்னர் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டலுக்கு அமைய பாடசாலைகளை ஆரம்பிப்பது அவசியமாகும். இதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக உலகளாவிய ரீதியில் எடுக்கப்படுகின்றன நடவடிக்கைகள் பற்றி ஜனாதிபதி தலைமையிலான கொரோனா வைரஸ் (கோவிட் 19) பரவலை தடுப்பதற்கான செயலணி தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரை 2 இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

(அ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னைகளுக்கு மனித உரிமைகள் பேரவையின் தீர்வு என்ன?



இன அழிப்பு தொடர்பான உண்மையைக் கண்டறியும் பணிக்குழுவொன்றை நியமிக்குமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, கடந்த புதன் கிழமை செப்ரெம்பர் 15 ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் மிச் செல் பச்லெட்டுக்கு கடிதமொன்றை அனுப்பி இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

ஐநா மனித உரிமை பேரவையின் 48வது அமர்வு சுவிற்சர்லாந்தில் உள்ள ஜெனீவா நகரில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்ற வருகின்றது. இலங்கை தொடர்பில் மனித உரிமை பேரவையின் ஆணையாளர், கடந்த 13ஆம் திகதி வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்திருந்தது டன், அதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடந்த 14ஆம் தேதி பதிலளித்திருந்தார்.

இலங்கை அரசின் செயல்பாடுகள் கவலையளிக்கும் விதத்தில் உள்ளதாக மனித உரிமை பேரவையின் ஆணையாளர் கருத்துரைத்த போதிலும், அதனை இலங்கை வெளிவிவகார அமைச்சர் நிராகரித்திருந்தார். அதேவேளையில் மனித உரிமைகள் ஆணையாளரும் தமது அறிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னை குறித்து எந்தவிதமான பிரதிபலிப்பையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.




**உறவுகளின் கடிதம்**

இந்த நிலையிலேயே, வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, ஐ.நா. மனித உரிமை பேரவையின் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

2000 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 20 வருட காலப் பகுதியில் சுமார் ஆறாயிரம் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவரக் கோவையை வெளியடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார் என அந்த அமைப்பின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி கடிதத்தில் தெரிவித்துள்ளார். இது மிக குறைந்த எண்ணிக்கை என அவர் குறிப்பிடுகின்றார்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவரக் கோவையை 4000 அல்லது அதற்கு குறைவாக காண்பிக்க முயற்சிக்கும் கண்துடைப்பு நாடகமே ஆரம்பிக்கப்பட்டுள்ளதை, மனித உரிமை ஆணையாளர் எவ்வாறு ஆமோதிக்க முடியும் என அவர் இந்த கடிதத்தின் ஊடாக கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை அரசு திட்டமிட்ட இன அழிப்பை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுத்திருந்ததாக அந்த அமைப்பு கூறுகின்றது.

**15,000 தமிழர்கள்**

இதன் ஓர் அங்கமாக, சுமார் 15,000 தமிழர்கள் அரச படைகளினாலும், அவர்களினால் இயக்கப்படுவோரினாலும் வலிந்து காணாமலாக்கப்பட்டார்கள் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிகள் என்பது மட்டுமல்லாது, 95 வீதமானோர் 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“ கடுமையாகப் பிரேரித்து விட்டு அடுத்த சில மாதங்களுக்குள் தீவில் மனித உரிமைகள் சீரழிந்து செல்லும் நிலையிலும், கொழும்பு அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையை ஆமோதிக்கும் நிலையை ஆணையாளர் எவ்வாறு கைக்கொள்ளலாம்? என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட வர்களின் உறவினர்கள் அமைப்பு கேள்வி எழுப்புகின்றது.**

இது ஒரு திட்டமிட்ட இன அழிப்புச் செயல் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு தெரிவிக்கிறது. இந்தத் தொகையைக் குறைத்துவிட இலங்கை அரசு முயற்சிக்கிறது எனவும் கூறப்பட்டுள்ளது.

இதற்கும் அப்பால், ஆறு மாதங்களுக்கு முன்னர் உள்ளகப் பொறிமுறை படுதோல்வி கண்டுவிட்டதுடன், ஐ.நா. உறுப்புரிமை நாடுகள் குற்றவாளிகளை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் போன்ற சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் ஊடாக விசாரிக்க



நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அமைப்பு கோரிக்கை விடுக்கிறது.

**ஒப்படைத்தது எதற்காக?**

கடுமையாகப் பிரேரித்து விட்டு அடுத்த சில மாதங்களுக்குள் தீவில் மனித உரிமைகள் சீரழிந்து செல்லும் நிலையிலும், கொழும்பு அரசாங்கத்தின் உள்ளகப் பொறிமுறையை ஆமோதிக்கும் நிலையை ஆணையாளர் எவ்வாறு கைக்கொள்ளலாம் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு கூறுகின்றது.




இலங்கை அரசிடம் ஐ.நா. தன்னிடமிருக்கும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான முறையீடுகளை ஏன் ஒப்படைத்தது? என ஐநா மனித உரிமை ஆணையாளரிடம், அந்த அமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த நடவடிக்கை வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு ஆபத்தானது என கூறியுள்ள அந்த அமைப்பு, இலங்கையின் வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை முற்றாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரியுள்ளது.

**முழுமையாகத் திரட்ட**

ஐ.நா. மேற்பார்வையில் இங்கு பாதுகாப்பை உறுதி செய்தால் மாத்திரமே காணாமலாக்கப்பட்டோரின் விவரங்களை முழுமையாகத் திரட்ட முடியும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி சர்வதேச மட்டத்திலான சுயாதீன விசாரணை மூலம், அதுவும் இன அழிப்பு குறித்த பார்வையுடனான விசாரணைக்கு உள்ளடக்கப்பட்டதாக, மியான்மார் மற்றும் சிரியா போன்ற நாடுகளுக்குக் கையாண்ட அதியுச்ச நிகழ்ச்சிநிரலுக்குள் வைத்து அணுகப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மனித உரிமைப் பேரவையின் அதியுச்ச நிகழ்ச்சிநிரல் நான்குக்குள் இலங்கையைக் கொண்டு வந்து அடுத்தகட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும் என தாம் தீர்க்கமாகக் கோருவதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பு, ஐ.நா. மனித உரிமை பேரவையிடம் கோரியுள்ளது.

பி.பி.சி.

# அவுஸ்திரேலியாவை திணறடிக்கும் டெல்டா

● நியூசிலாந்து சிற்சபேசன்

**“ கொரோனாப் பரவலைக் கையாள்வதிலே, தடுப்பூசி நிலை பேறான தீர்வல்ல என்னும் கருத்தை வல்லுனர்கள் முன்வைக்கின்றனர். காரணம்: வைரஸின் புதிய திரிபுகள் அவ் வப்போது உருவாகின்றன. சமூக மட்டத்திலே பரந்துபட்ட நோயெ திர்ப்பு சக்தி (ஹெர்ட் இம்யுனிட்டி) ஏற்பட வேண்டும். அதுவரையிலா வது, பூமிப்பந்தெங்கிலும் ஒற்றைக் கவனப்புள்ளியாக கொரோனாத் தொற்று வலம் வருமென்பது பரவலான கணிப்பாகும்.**

கொரோனாப் பேரிடரைக் கையாள்வதிலே தனித்துவமான இடத்தையே அவுஸ்திரேலியா கொண்டிருக்கின்றது. எல்லைக்கட்டுப்பாடு, சர்வதேச வருகையாளருக்கு கட்டாயத் தனிமைப் படுத்தல், சமூகப்பரவல் ஏற்படுகின்ற பட்சத்தில் காண்டக்ட்ரேசிங் (தொற்று ஏற்பட்டவர்களை அடையாளம் காண்தல்), சமூகப்பரவலைக் கட்டுப் படுத்தப் பொது முடக்கம், தடுப்பூசி என ஒன்றுடனொன்று தொடர்புடைய அணுகுமுறைகள் மூலமாகத் தேசத்தைப் பேணிப்பாதுகாத்துக் கொள்கின்றது. கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பமாகிய டெல்டா பரவல் தேசத்தையே புரட்டிப் போட்டிருக்கின்றது.

சிட்னியும், மெல்பர்னும் அவுஸ்திரேலியாவின் பெருநகரங்களாகும். தேசத்தின் மொத்த சனத்தொகையில் நாற்பது விழுக்காடு வரையானோர் இவ்விரண்டு நகரங்களிலேயே வாழ்கின்றனர். பொருளாதார இழுவைத்துடிப்பு, சர்வதேச ஊடாட்டம் போன்றவற்றையும் இவ்விரண்டு நகரங்களுமே அதிகமாகக் கொண்டிருக்கின்றன. சாமான்யர்களின் பாசையில் சொல்வதனால், சிட்னி - மெல்பர்னுக்கு ஏற்படுகின்ற தும்மலும் இருமலும், தேசத்தின் பிறபகுதிகளுக்கும்கூட அசதியை ஏற்படுத்தக் கூடியதாகும்.

முதன்முதலில் கொரோனாப்பரவல் ஆரம்பமாகிய போது, தேசம்தழுவிய பொதுமுடக்கம் 2020 மார்ச்சில் ஏற்பட்டது. ஐம்பது வரையான தினங்களுக்கு அஃது நீடித்தது. அதன்பின்னர், பொதுமுடக்கம் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலைகளை சிட்னி இலாவகமாகத் தவிர்த்துக்கொண்டது. துரிதமான காண்டக்ட்ரேசிங் மூலமாக, சமூகப்பரவல் அச்சுறுத்தல்களை சிட்னி சாமாளித்துக்கொண்டது.

அதேசமயத்தில், மெல்பேர்ன் பொதுமுடக்கத்தின் தலைநகராகியது. வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு அளவுகளிலான பொதுமுடக்கம் வழியாகவே மெல்பேர்ன் கொரோனாத் தொற்றின் சமூகப்பரவல் அச்சுறுத்தலைக் கையாள்கின்றது. யார்பெரிது என்பதிலே, மெல்பேர்ன் சிட்னிக்கிடையே, வெளியே அதிகமாக காட்டிக்கொள்ளாத போட்டிமனநிலையொன்று எப்போதுமேயுண்டு. அதனால் மெல்பேர்னின் பொதுமுடக்க அணுகுமுறை தொடர்பில், சிட்னிக்கு இளக்காரமான பார்வை உண்டு. பொதுமுடக்கம் ஏற்படுத்தாமலே கொரோனாப் பரவலைக் கையாள்வதான இறுமாப்பு சிட்னிக்கு உண்டு. அதுவே, தற்போது வினையாகியிருக்கின்றது.

கொரோனாப் பரவலைக் கையாள்வதிலே, தடுப்பூசி நிலைபேறான தீர்வல்ல என்னும் கருத்தை வல்லுனர்கள் முன்வைக்கின்றனர். காரணம்: வைரஸின் புதிய திரிபுகள் அவ்வப்போது உருவாகின்றன. சமூகமட்டத்திலே பரந்துபட்ட நோயெதிர்ப்புசக்தி (ஹெர்ட் இம்யுனிட்டி) ஏற்படவேண்டும். அதுவரையிலாவது, பூமிப்பந்தெங்கிலும் ஒற்றைக்கவனப்புள்ளியாக கொரோனாத்தொற்று வலம்வருமென்பது பரவலான கணிப்பாகும். அதனால், கொரோனாப் பரவலைக் கையாள்வதற்கு, அவ்வப்போது பொதுமுடக்கம் போன்ற கட்டுப்பாடு தேவைப்படலாம் என்னும் கருத்துக் காணப்படுகின்றது.

அத்தகைய கோணத்திலே பார்க்கும் போது, பொதுமுடக்கத்திற்கு மெல்பேர்ன் பழகியிருக்கின்றது. சிட்னி பழகவில்லை. அதுமட்டுமல்ல, பொதுமுடக்கம் ஏற்படுத்தாமலே, தொற்றைக் கையாள்கின்ற நகரம் என்னும் பெருமையும் சிட்னிக்குச் சுமையாகிவிட்டது. ஓய்வுபெறுகின்றவரையில் பலரையும் புரட்டிபோட்டுவிட்டு, ஓய்வுக்குப் பின்னர் திணறுகின்ற ஒருவரின் நிலையே சிட்னிக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஜூன் மாதத்தில் டெல்டா பரவல் ஆரம்பமாகிய போது, முன்னைய திரிபுகளைக் கையாண்ட பாங்கிலேயே சிட்னி செயல்பட்டது. பொதுமுடக்கத்துக்கு தயாராக வில்லை. காண்டக்ட்ரேசிங் மூலமாக சமூகப் பரவலைக் கட்டுப்படுத்தவே விரும்பியது. டெல்டாவின் பரவல் விகிதம் அதிகமென்பதை, உலகின் பல்வேறுபாகங்களி லும் ஏற்பட்ட அனுபவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அத்துடன், கணப்பொழுதிலான அருகாமையில் டெல்டா பரவக்கூடியது என்றும் சொல்லப்படுகின்றது. ஒரு தொற்றாளர் அடையாளமாகின்றவேளையில், நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்குப் பரவல் ஏற்பட்டிருக்கலாமெனத் தோராயமாகச் சொல்லப்படுகின்றது. காண்டக்ட்ரேசிங் மூலமாகத் தொற்றாளர்களை முற்றுமுழுதாக அடையாளம் காணமுடியாத சூழ்நிலைக்கே சிட்னி தள்ளப்பட்டது. அதனால் ஜூன் 26இல் பொது முடக்கம் தவிர்க்கமுடியாததாகியது.

“எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு” என்பதையும் சிட்னி புரிந்துகொள்ளவில்லையோ என்றே தோன்றுகின்றது. பொது முடக்கத்தை சிட்னிவாசிகள் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. பொதுமக்களின் ஊடாட்டங்களை முற்றுமுழுதாக நிறுத்துவது. அதனூடாக தொற்றுப் பரவல் அதிகரிப்பதை தடுப்பது. அதேவேளையில் தொற்றுஏற்பட்டவர்களை வேகமாக அடையாளம் கண்டு தனிமைப்படுத்துவது. அந்தவகையிலே சமூகப் பரவல் ஏற்படுவதை தவிர்ப்பது என்பவையே பொது முடக்கத்தின் குறிக்கோள்களாக வரையறுக்கப்படுகின்றன.




பரந்துபட்ட சிட்னிச் சமூகத்தின் இயல்புவாழ்க்கை பொதுமுடக்கத்திலே பாரியளவில் பாதிக்கப்படவில்லை. அதனையே, செப்ரெம்பர் நடுப்பகுதியிலே தாண்டவமாடுகின்ற, நாளாந்த தொற்று எண்ணிக்கையின் அதிகரிப்புச் சொல்லுகின்றது. ஒருபுறத்தில், தொற்று எண்ணிக்கை அதிகரிக்கின்றது. மறுபுறத்தில், பொதுமுடக்க கட்டுப்பாடுகள் இறுக்கமடைகின்றன. அதனால், சிட்னிவாசிகள் திணறுகின்றனர்.

பொதுமுடக்கம் வெவ்வேறு படிநிலைகளில் கையாளப்படுகின்றது. தொற்றுப்பரவலின் அடிப் படையில், பொதுமுடக்கவலயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அதுவும்கூட, பொதுமக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

முகக்கவசம் அணியாத ஒருவர் தொடர்பில் மாநகரின் ஒருபகுதியிலே பொலிஸ் நடவடிக்கையும், மற்றுமொருபகுதியில் சமூக இடைவெளியோ அல்லது முகக்கவசமோ இன்றி கடற்கரையில் பெருந்தொகையானோர் கூடியிருந்தபோது பொலிஸ் நடவடிக்கையின்மையும் கண்டனத்துக்கு உட்பட்டிருக்கின்றது. நகரின் கிழக்கு செல்வந்தப்பகுதியாகவும், மேற்கு உழைக்கும் வர்க்கத்தினரின் பகுதியாகவும் பேச்சு வழக்கில் சொல்லப்படுவதாகும். அதனுடைய சாயல், பேரிடர்காலக் கட்டுப்பாடுகளிலேயும் தெரிவதான அபிப்பிராயமும் காணப்படுகின்றது. அதனைப் பிரதிபலிப்பதாகவே, கிழக்கே வசிப்பவர்களைப் போன்றே நாங்களும் ஒட்சிசனை (பிராணவாயு) சுவாசித்து காபனீரொட்சைட்டை (கரியமிலவாயு) வெளியேற்றுகின்றோம் என மேற்குப்பகுதி நகரான பெஃயர்பீல்ட்டின் மேயர் பொரிந்துதள்ளினார்.

பொதுமுடக்கமொன்றிலே திணறுவதற்கு சிட்னியினுடைய விஸ்தீரணமும் காரணமாகும். பன்னிரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட சிட்னிப்பெருநகரத்திலே, ஐந்துமில்லியன் மக்கள் வசிக்கின்றனர். முப்பதுக்கு மேற்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்கள் (கவுன்சில்) உள்ளன. ஆளணியை மையப்படுத்தியதே சிட்னியின் தொழில்வளமாகும். தினசரி சராசரியாக ஆறுலட்சம்பேர் சிட்னிநகரின் மையப்பகுதிக்கு வருகின்றனர். மாதாந்த சர்வதேச வருகையாளர் சராசரியாக மூன்றரை இலட்சமாகும். அஃது தேசத்தின் மொத்த சர்வதேசவருகையாளரில் அண்ணளவாக அரைமடங்காகும். அந்தவகையிலேயும்கூட, சிட்னி போன்றதொரு பெருநகரிலே பொது முடக்கமொன்றை அமுல்படுத்துவது எளிதான காரியமல்ல. எது எப்படியாகிலும், டெல்டா பரவலினால் சிட்னியும் மெல்பர்னும் சவால்களை எதிர்கொள்கின்றன. அதுவே, பரந்துவிரிந்த கங்காரு தேசத்தின் திணறலாகிக்கொண்டிருக்கின்றது.■



# 2021 க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் வினாத்தாள் கணக்கீடு - I

ஆசிரியர் : கே.பாலகஜன்
நேரம் : 2 மணித்தியாலங்கள்

கல்வி tv CHANNEL

**47)** **இருப்புக்கட்டுப்பாட்டின்** போது பின்வரும் **கருமங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற ஆவணங்களினைக் குறிப்பிடுக.**

அ) பொருட்களினைக் கொள்வனவு செய்யுமாறு களஞ்சியசாலையிடமிருந்து **கொள்வனவுத் திணைக்களத்திற்கு** கட்டளையினை இடுதல் ..................................................

ஆ) **உற்பத்தித் திணைக்களத்திற்கு** தேவையான பொருட்களினை **களஞ்சியசாலையிடமிருந்து** கோருதல் ..................................................

இ) கொள்வனவுத்திணைக்களத்தினால் **குறித்த வழங்குநருக்கு** கட்டளையினை இடுதல் ..................................................

ஈ) **குறித்த வழங்குநரிடமிருந்து** பொருட்கள் **பெற்றுக்கொண்டமையினை** உறுதிப்படுத்துதல் ..................................................

**48)** **வைஸ்ணவி PLC** ஒரு வகையான **கைப்பையினை** உற்பத்தி **செய்யத்திட்டமிடுகின்றது.** இப்பொருட்கள் தொடர்பான குறிப்பிட்டவொரு **காலப்பகுதிக்கான மதிப்பிடப்பட்ட தகவல்கள் பின்வருமாறு தரப்படுகின்றன.**

| | |
|---|---|
| அலகொன்றுக்கான நேர்மூலப்பொருட்கிரயம் | ரூபா.4600 |
| அலகொன்றுக்கான நேர்ஊழியக்கிரயம் | ரூபா.2000 |
| அலகொன்றுக்கான ஏனைய நேர்க்கிரயம் | ரூபா.1400 |
| அலகொன்றுக்கான முதன்மைக்கிரயம் | ரூபா.8000 |
| நேர் ஊழிய வீதம் **மணித்தியாலமொன்றுக்கு** | ரூபா.500 |
| உற்பத்தி மேந்தலை உறிஞ்சல் வீதம் **(நேர் ஊழிய மணித்தியாலமொன்றுக்கு)** | ரூபா.600 |
| உற்பத்தி அல்லா மேந்தலைகள் **மொத்தக்கிரயத்தின்** | 20% |
| அலகொன்றுக்கான இலாபம் **விற்பனை விலையில்** | 25% |

**பின்வருவனவற்றைக் கணிக்குக.**

அ) **அலகொன்றுக்கான** மதிப்பிடப்பட்ட **உற்பத்தி மேந்தலைக்கிரயம்** ரூபா ..............................

ஆ) **அலகொன்றுக்கான** மதிப்பிடப்பட்ட **உற்பத்திக்கிரயம்** ரூபா ..............................

இ) **அலகொன்றுக்கான** மதிப்பிடப்பட்ட **மேந்தலைக்கிரயம்** ரூபா ..............................

ஈ) **அலகொன்றுக்கான** மதிப்பிடப்பட்ட **விற்பனை விலை** ரூபா ..............................

**49)** **ஆனல்ட் PLC** இன் 2022 **ஜனவரி, பெப்ரவரி** மாதங்களிற்கான **ஒருவகைப்பண்டமொன்றுடன்** தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

| | ஜனவரி | பெப்ரவரி |
|---|---|---|
| விற்பனை வருமானம்(ரூபா) | 4000000 | 6000000 |
| இலாபம்(ரூபா) | 600000 | 1000000 |

மேற்குறிப்பிடப்பட்ட **காலப்பகுதியினுள் நிலையான கிரயம், அலகொன்றிற்கான மாறும் கிரயம், அலகொன்றுக்கான விற்பனை விலை** என்பவை மாற்றமடையவில்லை என்பதுடன் **அலகொன்றுக்கான விற்பனை விலை** ரூபா.1000 ஆகும்.

**பின்வருவனவற்றைக்கணிப்பிடுக.**

அ) **பங்களிப்பு விற்பனை வீதம்(%)** ..............................................

ஆ) **அலகொன்றுக்கான பங்களிப்பு ரூபா** ..........................................

இ) **8000 அலகுகளில் இலாபம் ரூபா** ............................................

**50)** **வரையறுக்கப்பட்ட** டிலக்சி PLC தற்போது பயன்பாட்டில் உள்ள இயந்திரத்திற்குப் பதிலாக புதிய இயந்திரத்தினை அறிமுகப்படுத்தியமையினால் காசு செயற்பாட்டுச்செலவு ரூபா.800000 இலிருந்து ரூபா.640000 வரை குறைவடைகின்றது. அத்துடன் பெறுமானத்தேய்வு ரூபா.180000 இலிருந்து ரூபா.240000 வரை **அதிகரிக்கும்** என்றும் விற்பனை வருமானம் ரூபா.1200000 இலிருந்து ரூபா.1280000 வரை **அதிகரிக்கும்** என்றும் கூறுகின்றது.

**புதிய இயந்திரமொன்றைக் கொள்வனவு** செய்வதற்கு ரூபா.1500000 **செலவு** ஏற்படும். **பழைய இயந்திர** விற்பனையின் மூலம் பெற்ற காசு ரூபா.100000 ஆகும். பழைய இயந்திரத்தின் **கொண்டு செல்லும் பெறுமதி** ரூபா.240000 ஆகும்.

இச்செயற்திட்டத்திற்கான பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ) ஆரம்ப தேறிய காசு வெளிப்பாய்ச்சல்/ஆரம்ப முதலீடு ரூபா.............................

ஆ) புதிய செயற்திட்டத்தின் வருடாந்த தேறிய காசு உட்பாய்ச்சல் ரூபா....................

இ) காசல்லாத உருப்படியினைக் குறிப்பிடுக............................................

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 816 பேர் கைது

கொழும்பு, செப். 18

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 816 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 77 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதற்கமைய இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 73 ஆயிரத்து 894ஆக உயர்வடைந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் மற்றும் உள்நுழையும் 13 இடங்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி நேற்று முன்தினம் 263 வாகனங்களில் பயணித்த 142 பேர் திருப்பி அனுப்பப்பட் டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை 285 பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது அனுமதிப் பத்திரமின்றி 865 வாகனங்களில் பயணித்த 1,438 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ)

# வவுனியாவில் மேலும் ஐவர் கொரோனாவால் உயிரிழப்பு

வவுனியா, செப். 18

வவுனியாவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இவர்களில் நால்வர் திடீர் சுகயீனம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின போது கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர்கள் வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணித்தனர்.

இதேவேளை, மற்றுமொருவர் பம்பைமடுவில் அமைந்துள்ள முதியோர் காப்பகத்தில் சுகயீனம் காரணமாக உயிரிழந்தனர்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (இ)

# இரு பெண்கள் உள்ளிட்ட 10 பேர் போதைப்பொருட்களுடன் கைது

கொழும்பு, செப். 18

போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் பெண்கள் இருவர் உள்ளிட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக, வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட படுமக பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 7 கிலோகிராம் கேரள கஞ்சா, 208 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதைப்பொருள் விற்பனையில் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 570 ரூபாய் பணம், இரண்டு தொலைபேசிகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆர்.பீ.வத்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 40 கிராம் 980 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லோகெட் பட்டுகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 06 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மருதானை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜா - எல பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஏக்கலை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலங்கம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 05 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பட்டபொத்த பிரதேசத்ததைச் சேர்நத் 31 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

தலங்கமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போதிராஜ மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 03 கிராம் 511 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஓட்டோவொன்றில் பயணித்த பெண்ணொருவர் உள்ளிட்ட மூவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மொரட்டுவை, இரத்மலானை ஆகிய பிரதே சங்களைச் சேர்ந்த 23, 25, 29 வயதுடைய இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ)

## ஐ.நா. பொதுச்செயலாளர் உள்ளிட்ட

# உலக தலைவர்களுடன் ஜனாதிபதி முக்கிய பேச்சு

## மாநாடு அமர்வு தொடர்பில் லலித் வீரதுங்க கருத்து



**கொழும்பு, செப்.18**

**நாட்டின் மனித உரிமை தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபை மாநாட்டு அமர்வில் உரையாற்றவுள்ளார் என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.**

அதேவேளை, அது தொடர்பில் முன்வைக்கப்படும் தவறான கருத்துக்களைச் சரி செய்வது தொடர்பிலும் அவர் கவனம் செலுத்துவார் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது, பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியான வீழ்ச்சியை சரி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஜனாதிபதியின் உரையின்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

மாநாட்டில் கலந்து கொள்ளும் அரச தலைவர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாயகத்தை தனித்தனியே சந்திப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவருடன் முக்கிய பல விடயங்களை உள்ளடக்கிய பேச்சை முன்னெடுப்பார்.

அத்துடன் மாநாட்டில் கலந்துகொள்ளும் இலங்கைக்கு ஆதரவான பல்வேறு நாடுகளின் அரச தலைவர்களை சந்திக்கும் ஜனாதிபதி, அந்த தலைவர்களுடன் முக்கியமான பேச்சுகளை முன்னெடுப்பார் என்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையம் ஏற்பாடு செய்திருந்த வாராந்த செய்தியாளர் மாநாடு சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது. அந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவிக்கும்போதே ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் லலித் வீரதுங்க மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இம்முறை ஐக்கிய நாடுகள் சபை அமர்வில் இரண்டு முக்கிய விடயங்கள் தொடர்பில் உரைகள் நடைபெறவுள்ளன. கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பை எதிர்நோக்கியுள்ள நாடுகள் அந்த பாதிப்பிலிருந்து தமது நாடுகளை மீளக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது தொடர்பில் இதன்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சில நாடுகள் மோசமான பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. அந்தவகையில் எமது நாடு தொடர்பில் நாம் சிறப்பான விடயங்களை முன்வைக்க முடியும்.

முக்கியமாக தடுப்பூசிகளை வழங்கும் செயற்பாடுகளில் முதல் பத்து நாடுகளில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்து வரும் நாடு என்ற வகையில் இது நாம் பெற்றுக்கொண்டுள்ள பெரும் வெற்றியாகும் என்பதைக் குறிப்பிடலாம்.

நாட்டின் பொருளாதாரம், சமூக ரீதியில் அடைந்துள்ள வீழ்ச்சி ஆகியவற்றை மீளக் கட்டியெழுப்புவது எவ்வாறு என்பது தொடர்பில் ஜனாதிபதியால் விடயங்கள் முன்வைக்கப்படவுள்ளன.

அதேவேளை, காலநிலை மாற்றம் தொடர்பில் பல்வேறு நாடுகளும் முகங்கொடுக்க நேர்ந்துள்ள நெருக்கடிகள் தொடர்பில் இங்கு ஆராயப்படவுள்ளன.

அவற்றுக்கு முறையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தால் அவை பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன என்பதால் அந்த விடயம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளது.


அத்துடன் மக்களின் வாழ்வாதாரத்துடன் சம்பந்தப்பட்ட அவர்களது உரிமைகள் மற்றும் எவ்வாறு அவற்றை சீர்செய்து கொள்வது என்பது தொடர்பில் பேசப்படவுள்ளன.

எமது ஜனாதிபதிக்கு மிக முக்கியமான சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த காலங்களில் நாட்டில் மனித உரிமை சம்பந்தமான பல்வேறு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் தெளிவுபடுத்தவும் முன் வைக்கப்படும் தவறான கருத்துக்களை சரி செய்வதற்கும் இந்தச் சந்தர்ப்பம் முக்கியமானதாகும்” - என்றார். (இ)

# அமுலில் உள்ள அவசரகால சட்டம் நெடுநாளுக்கு நீடிக்கப்படக்கூடாது!

## அரசின் பங்காளியான சு.க. வலியுறுத்து



கொழும்பு, செப். 17

“அவசரகாலச் சட்டத்துக்கு எதிர்ப்பு என்ற போதிலும் அத்தியாவசிய தேவையின் நிமிர்த்தமே அதற்கு ஆதரவாக வாக்களித்தோம். எனவே, தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் நெடுநாளுக்கு நீடிக்கப்படக்கூடாது.”

- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர கூறியவை வருமாறு:-

“இராணுவ மயமாக்கல் நடவடிக்கையை எமது கட்சி அனுமதிக்காது. அதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிடுவோம். எனினும், இராணுவ மயமாக்கலை இலக்காகக்கொண்டு அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. மாறாக உணவுப்பொருட்களைப் பதுக்கி, கருப்பு வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாலேயே அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

குறித்த சட்டத்துக்கு கொள்கை ரீதியில் நாம் எதிர்ப்பு என்ற போதிலும், அத்தியாவசிய தேவையின் நிமிர்த்தம் ஆதரவாக வாக்களித்தோம்.

எது எப்படி இருந்தாலும் அவசரகாலச் சட்டம் நீண்ட காலத்துக்கு நீடிக்காது என நம்புகின்றோம். அதற்கான தேவையும் எழாது” - என்றார். (இ)

ஈழநாடு



# அணு ஆயுத தாக்குதலுக்கு ஆஸி. இலக்காக நேரலாம்!

## சீனா பகிரங்க எச்சரிக்கை

பீஜிங், செப். 18

அவுஸ்திரேலியா அணு ஆயுத தாக்குதலுக்கு இலக்காகலாம் என்று சீன அரச ஊடகம் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காக, இங்கிலாந்து, அவுஸ்திரேலிய நாடுகள் ஆக்கஸ் என்ற புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்தில் இணைந்தன. இந்த உடன்படிக்கையின் கீழ் அணு ஆயுதத்தை ஏவவல்ல 8 நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கும் தொழில்நுட்பம் அவுஸ்திரேலியாவுக்கு கிடைக்கவுள்ளது.

இந்த உடன்படிக்கை சீனாவுக்கு எதிரானது என்று அச்சம் எழுந்த நிலையில், அணு ஆயுதங்களை ஏவவல்ல கப்பல்களை வாங்குவதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், சீனாவின் அரச பத்திரிகையான தி குளோபல் ரைம்ஸ் அவுஸ்திரேலியா அணு ஆயுத வல்லமை கொண்ட நீர்மூழ்கி கப்பல்களை பெறுவதாலும் - தொழில்நுட்பத்தை அறிவதாலும் அணு ஆயுதத் தாக்குதலுக்கு இலக்காக நேரலாம் என்று எச்சரித்துள்ளது. (ஐ)



# எட்டு மாதங்களில் ஆப்கானில் 50 இலட்சம் பேர் இடப்பெயர்வு!

## ஐ. நா. சபை அறிக்கை

நியூயோர்க், செப். 18

ஆப்கானிஸ்தானில் இருந்து கடந்த 8 மாதங்களில் 50 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ. நா. வெளியிட்ட அறிக்கையில், “கடந்த 8 மாதங்களில் 50 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். பெரும்பாலான மக்கள் ஈரான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்தும் ஆப்கான் திரும்பியுள்ளனர். இதில் ஆப்கான் எல்லையோரங்களில் வசிக்கும் மக்கள் உணவுப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறிய நிலையில், அங்கு தலிபான்கள் நாட்டின் ஆட்சியை கைப்பற்றினர். அவர்களின் பழமைவாத சட்டங்களுக்கு அஞ்சி ஆப்கானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

# 7.7 கோடி சிறுவர்கள் தொற்றால் பாடசாலைகள் செல்லவில்லை!

## ஐ.நா. சிறுவர் நிதியம்

நியூயோர்க் செப். 18

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்று பரவலால் டந்த 18 மாதங்களாக ஏறக்குறைய7 கோடியே 70 இலட்சம் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை என ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்று நோயால் உலகம் கல்வி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை, ஐ. நா. சிறுவர் நிதியம் சமூகவலைதளத்தில் வெளியிட்ட செய்தியில்,

மொத்த மாணவர் தொகையில் 7.5 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 11 கோடியே 70 இலட்சம் மாணவர்கள் 18 நாடுகளில் முழுமையாக பாடசாலைகள் மூடப்பட்டமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓரளவிற்கு பாடசாலைகள் திறக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கை 52இலிருந்து 41ஆகக் குறைந்துள்ளது.

ஐந்து நாடுகளில் மொத்தம் 18 மாத காலத்தில் பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் 7 கோடியே 70 இலட்சம் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது. (ஐ)



# காட்டு தீயால் அழிவின்பிடியில் உலகின் மிகப்பெரிய மரங்கள்!

கலிபோர்னியா, செப். 18

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் பற்றியெரியும் காட்டுத் தீயால் உலகின் மிகப் பெரிய செக்கோயா மரங்கள் (கலிபோர்னியா செம்மரம்) அழியும் ஆபத்தில் உள்ளன. இந்த நிலையில் அவற்றைக் காப்பாற்றும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

செக்கோயா மரங்களுக்கு அலுமினிய தகடுகளை கவசம் போல சுற்றி அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது கலிபோர்னியாவின் செக்கோயா தேசியப் பூங்காவில் எரிந்துவரும் காட்டுத் தீ அருகிலுள்ள பெருங் காட்டைத் தாக்கலாம் என அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இந்தக்காட்டில் 275 அடி உயரம் கொண்ட ஜெனரல் ஷெர்மன் உள்ளிட்ட சுமார் 2,000 செக்கோயா மரங்கள் உள்ளன.

இந்தநிலையில் தீயை அணைக்கும் பணியில் ஹெலிகொப்டர்கள், விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சுமார் 350 வீரர்கள் போராடி வருகின்றனர். உலகத்தில் இப்போதிருக்கும் மரங்களில் மிகப்பெரிய மரமாக ஜெனரல் ஷெர்மன் என அழைக்கப்படும் செக்கோயா மரம் கருதப்படுகிறது. இதன் வயது சுமார் 2,700 வருடங்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது மிக முக்கியமான பகுதி. எனவே இந்த தோப்பைப் பாதுகாக்க தீவிரமான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன என செக்கோயா மற்றும் கிங்ஸ் கனியன் தேசிய பூங்கா செய்தித் தொடர்பாளர் ரெபேக்கா பேட்டர்சன் தெரிவித்துள்ளார். கலிபோர்னியாவில் இந்தக் கோடையில் 7,400 க்கும் மேற் பட்ட காட்டுத்தீ சம்பவங்கள் பதி வாகியுள்ளன. 22 இலட்சம் ஏக்க ருக்கு மேல் காடுகள் எரிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# சீனாவின் 3 விண்வெளிவீரர்கள் 90 நாள் கழித்து பூமி திரும்பினர்

பீஜிங், செப். 18

விண்வெளியில் மிகநீளமான பயணத்தை முடித்துக் கொண்டு சீனாவின் மூன்று விண்வெளி வீரர்கள் நேற்று பூமிக்கு திரும்பினர்.

புவியிலிருந்து 380 கி. மீ. உயரத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ள சீனாவின் விண்வெளி நிலையமான தியான்ஹேயில் 90 நாட்கள் இந்த வீரர்கள் தங்கியிருந்தனர்.

நை ஹைசெங், லியூ போமிங், தாங் ஹொன்போ என்ற இந்த மூன்று விண்வெளி வீரர்களும் செஷன்ஜோ - 12 விண்ஓடம் மூலம் விண்வெளி நிலையத்திலிருந்து வியாழக்கிழமை புறப்பட்டனர். நேற்று வெள்ளிக்கிழமை சீன நேரம் மதியம் 1.35 மணிக்கு இவர்கள் கோபி பாலைவனத்தில் தரையிறங்கினர்.

இவர்கள் கடந்த ஜூன் 17ஆம் திகதி விண்வெளிக்கு புறப்பட்டனர். அங்கு, விண்வெளியில் தரவுகளை சேகரித்து பூமிக்கு அனுப்பியதுடன், விண்வெளி நடைபயிற்சி உள்ளிட்ட பணிகளிலும் ஈடுபட்டனர்.

அண்மைய ஆண்டுகளில் சீனா தனது விண்வெளி இலக்குகளில் வேகமாக முன்னேறியுள்ளது. 2019இல் சந்திரனுக்கு ரோபோ ரோவரை அனுப்பிய முதல் நாடு என்ற பெருமையை பெற்றது. சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து விலக்கப்பட்ட சீனா, தற்போது தனக்கு சொந்தமாக தியாஹோ விண்வெளி நிலைய கட்டுமானத்தை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சூகிமீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமானால் 60 வருட சிறை!

யங்கூன், செப். 18

வீட்டுசிறையில் வைக்கப்பட்டுள்ள ஆங் சான்சூகி மீது சுமத்தப்பட்ட 4 குற்றச்சாட்டுக்கள் நிரூபணமானால் ஒவ்வொரு குற்றத்துக்கும் அவருக்கு தலா 15ஆண்டுகள் சிறை கிடைக்கும் என்று மியன்மார் நாட்டின் நீதித்துறையை ஆதாரம் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அவர் மீதான விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளன. சூகி மீது தேர்தல் பிரச்சாரத்திற்காக கொரோனா தொற்று கட்டுப்பாடுகளை மீறியமை, சட்டவிரோதமாக தொலைத் தொடர்பு கருவிகளை இறக்குமதி செய்தமை, தேசவிரோத பேச்சு, ஊழல் என்று நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

76 வயதான நோபல் பரிசு பெற்ற ஆங் சான் சூகி மீதான, இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் வாழ்நாளின் மீதிப் பகுதியை சிறையிலேயே கழிக்க வேண்டியிருக்கும் எனக் கூறப்படுகிறது.

முன்னதாக 1962ஆம் ஆண்டுமுதல் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்த இராணுவ ஆட்சியை எதிர்த்தமைக்காக அவர் 21 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார். மக்கள் போராட்டத்தால் 2015இல் ஜனநாயக ஆட்சி அங்கு மலர்ந்தது. 2020 நவம்பரில் தேர்தல் நடந்த தேர்தலில் சூகியின் கட்சி வெற்றி பெற்று ஆட்சியை பொறுப்பேற்கவிருந்த நிலையில் இராணுவம் நாட்டின் ஆட்சியை பிடித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



ஈழநாடு



# பாகிஸ்தான் - நியூசிலாந்து தொடர்கள் இடைநிறுத்தம்!

## போட்டி தொடங்க முன்னர் அறிவிப்பு



லாகூர், செப். 18

பாகிஸ்தான் அணியுடனான ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடரை பாதுகாப்பு காரணங்களை காட்டித் திடீரென இடைநிறுத்தியது நியூசிலாந்து கிரிக்கெட் சபை.

ராவல்பிண்டியில் நேற்று மாலை பகல் - இரவு போட்டியாக ஒருநாள் போட்டி நடைபெறவிருந்தது. இந்தநிலையில் போட்டி தொடங்க சில மணி நேரம் முன்னதாக போட்டி நிறுத்தப்பட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பில் நியூசிலாந்து அரசாங்கம் விடுத்த எச்சரிக்கையை தொடர்ந்தே போட்டி நிறுத்தப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் சென்றுள்ள நியூசிலாந்து அணி 3 ஒரு நாள் மற்றும் 5 இருபது - 20 போட்டிகளில் விளையாட இருந்தது. முதல் ஒருநாள் போட்டி ராவல்பிண்டி நகரில் பார்வையாளர்கள் இல்லாமல் நடத்தப்படவிருந்தது. இந்த நிலையில் போட்டியை நிறுத்தி இரு தொடர்களையும் இடைநிறுத்துவதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

இது தொடர்பில் அந்த சபை விடுத்த அறிக்கையில், “பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பான அச்சம், நியூசிலாந்து பாதுகாப்பு ஆலோசகர்களின் அறிவுரை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பாகிஸ் தானுடனான தொடரைத் தொடர முடியாது. ஆதலால், தொடரை இடைநிறுத்தி உடனடியாக நியூசிலாந்து வீரர்கள் நாடு திரும்புவார்கள்” எனத் தெரிவிக்கப் பட்டது.

நியூசிலாந்து சபையின் நிர்வாக அதிகாரி டேவிட் வைய்ட் கூறுகையில், “பாகிஸ்தான் கிரிக்கெட்சபைக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்பதை அறிவேன். ஆனால், வீரர்களின் பாதுகாப்பு மிக மிக முக்கியம். தொடரை நிறுத்துவதுதான் ஒரே வாய்ப்பாக இருந்தது” எனத் தெரிவித்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு கராச்சி நகரில் வீரர்கள் தங்கியிருந்த ஹோட்டலில் வெடிகுண்டு வெடித்த தையடுத்து, அப்போது தொடரை நியூசிலாந்து அணி நிறுத்தியது. இதன்பின் 2003ஆம் ஆண்டு பாகிஸ்தா னுக்கு சென்று ஒருநாள் தொடரில் நியூசிலாந்து அணி கடைசியாக விளையாடியது. அதன்பின் கடந்த 18 ஆண்டுகளாக பாகிஸ்தானுக்கு நியூசிலாந்து அணி பயணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நியூசிலாந்து தொடரை இடைநிறுத்தி யமை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில், இங்கிலாந்து ஆண், பெண்கள் அணிகள் அடுத்த மாதம் பாகிஸ்தான் வரவிருந்தன. இதனால், அந்த நாடும் இந்த சுற்றுப் பயணத்தை மீள் பரிசீலனை செய்யலாம் என்று கூறப் படுகின்றது.

இதேநேரம், நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் முடிவை தன்னிச்சையான முடிவு என்று பாகிஸ்தான் விமர்சித்துள்ளது. (ஐ)



# சானியா இணை காலிறுதியில்...!

லக்சம்பேர்க் சிற்றி,செப்.19

லக்சம்பேர்க் ஓப்பன் ரென்னிஸ் இரட்டையர் பிரிவு போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, சீனாவின் ஷூவாய் ஜோங் இணை காலிறுதிக்கு முன்னேறியது.

லக்சம்பேர்க்கில், பெண்களுக்கான டபிள்யூ. ரி. ஏ., பரிபாஸ் ஓபன் ரென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்தியா வின் சானியா மிர்சா, சீனாவின் ஷூவாய் ஜாங் ஜோடி, ஜேர்மனியின் யானா, டயிசியா மோர்டர்ஜர் ஜோடியை எதிர்கொண்டது.

முதல் செற்றை 6:2 எனக் கைப்பற்றிய சானியா இணை, 2ஆவது செற்றை 6:3 என வென்றது. ஒரு மணி நேரம், 4 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய சானியா இணை 6:2, 6:3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (ஐ)




# 2000 மீற்றர் ஓட்டத்தில் புதிய உலக சாதனை!

ஸெக்ரெப், செப். 18

பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டியில் புரூண்டி நாட்டு வீராங்கனையான பிரான்சின் நியொன்சபா உலக சாதனையை ஏற்படுத்தினார்.

குரெஷியாவின் ஸெக்ரெப் நகரில் நடைபெற்ற 71ஆவது போரிஸ் ஹென்சோகோவிக் ஞாபகாரத்த மெய்வல்லுநர் போட்டியில் புதன்கிழமை இரவு நடைபெற்ற பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டித் தூரத்தை 5 நிமிடங்கள் 21:56 செக்கன்களில் ஓடி முடித்து உலக சாதனை படைத்து தங்கப் பதக்கம் வென்றார் பிரான்சின் நியொன்சபா.

1994 இல் பெண்களுக்கான 2000 மீற்றர் ஓட்டப் போட்டியில் சோனியா ஓ சுல்லிவன் எனும் அயர்லாந்து நாட்டு வீராங்கனை போட்டித் தூரத்தை 5 நிமிடங்கள் 25:36 செக்கன்களில் ஓடி முடித்தமையே உலக சாதனையாக இருந்தது. இந்த சாதனையையே தற்போது பிரான்சின் நியொன்சபா முறியடித்துள்ளார். (ஐ)

# டில்லியின் தலைவராக ரிஷப் பந்தே தொடர்வார்

புதுடில்லி, செப். 18

ஐ. பி. எல். அணியான டில்லி கப்பிட்டல்ஸின் தலைவராக ரிஷப் பந்தே தொடர்வார் என்று உத்தி யோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.


டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு ஸ்ரேயாஸ் ஐயரே தலைமை தாங்கி வந்தார். இந்த நிலையில், இங்கிலாந்து போட்டியில் அவருக்கு காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இந்தியாவில் நடந்த ஐ.பி.எல். தொடரில் அவர் விளையாடவில்லை. இதனால், டில்லி அணிக்கு ரிஷப் பந்த் தலைவராக அறிவிக்கப்பட்டார். அவரின் தலைமையில் டில்லி கப்பிட்டல்ஸ் 12 புள்ளிகளுடன் தொடரில் முதலிடத்தை வகித்து வருகின்றது.

இதைத் தொடர்ந்து, தொற்று அபாயத்தால் போட்டி இடைநிறுத்தப்பட்டது. இந்தப் போட்டி நாளை ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பமாகின்றது. இந்த நிலையில், ஸ்ரேயாஸ் ஐயர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார். இதையடுத்து யார் அணித் தலைவர் என்பதில் குழப்பம் நீடித்தது.

இதற்கு முடிவுகட்டும் விதமாக அணி நிர்வாகம், இந்த ஆண்டுக்கான தொடர் முழுவதும் ரிஷப் பந்தே தலைவராகத் தொடர்வார் என்று உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (ஐ)



# தலைமையை துறக்கிறார் கோலி!




புதுடில்லி, செப். 18

இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டியின் பின்னர் தலைமைப் பதவியிலிருந்து விலகுகிறேன் என்று விராட் கோலி நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

எனினும், அவர் ஒருநாள், டெஸ்ட் போட்டி களுக்கான தலைவராகத் தொடர்வதுடன், இருபது - 20 போட்டியிலும் தொடர்ந்து விளையாடுவார் என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில், “கடந்த 8, 9 வருடங்களாக மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடி வருகிறேன். 5,

6 வருடங்களாக தலைவராக உள்ளேன். இந்திய டெஸ்ட், ஒருநாள் அணிகளை வழிநடத்த இருபது - 20 உலகக் கிண்ணத் தொடருக்கு பிறகு இருபது -20 போட்டியின் தலைமை பதவியில் இருந்து விலகுகிறேன்.

இதுபற்றி ரவி சாஸ்திரி, ரோஹித் சர்மாவிடம் விவாதித்த பிறகே இம்முடிவை எடுத்தேன். கங்குலி, ஜெய் ஷா, தெரிவுக்குழுவினரிடமும் இதுபற்றி தகவல் தெரிவித்துள்ளேன். இந்திய அணிக்காகத்

தொடர்ந்து என்னுடைய திறமையை வெளிப் படுத்துவேன்”, என்றுள்ளது. (ஐ)

# கைக்குண்டு விவகாரம்: மேலும் ஒருவர் கைது!



கொழும்பு, செப். 18

கொழும்பு, நாரஹன்பிட்டியில் அமைந்து லங்கா வைத்தியசாலையின் கழிப்பறையிலிருந்து கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றவியல் பிரிவினர் முன்னெடுத்த விசாரணைகளையடுத்து குருநாகல், மஹவ பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதான சந்தேகநபர் ஒருவர் கொழும்பு குற்றவியல் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்படுமா?

**விசாரணை நடத்துமாறு கொழும்பு மறைமாவட்டம் கோரிக்கை**



**கொழும்பு, செப்.18**

**இலங்கையில் மீண்டும் தாக்குதல் நடத்தப்படலாம் என பொதுபலசேனா அமைப்பு வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணையை முன்னெடுக்குமாறு கொழும்பு கத்தோலிக்க மறைமாவட்டம் கோரிக்கை விடுத்துள்ளது.**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், அண்மையில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்த கருத்துகளுக்கு கொழும்பு மறைமாவட்டம் அறிக்கை மூலம் பதிலளித்துள்ளது.

இது தொடர்பில் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்டுள்ள குறித்த அறிக்கையில்,

"இலங்கையில் மிக விரைவில் மற்றுமொரு தாக்குதல் நடத்தப்படலாம் எனவும், எந்த நேரத்திலும் தாக்குதலை நடத்துவதற்கான ஆயுதங்கள் தயார் நிலையில் இருக்கின்றன எனவும் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், இது தொடர்பான தகவல் மற்றும் சாட்சிகள் என்பன தன்னிடம் இருக்கின்றன எனவும், அவற்றை நிரூபிப்பதற்குத் தன்னால் முடியும் எனவும், இது தொடர்பில் ஜனாதிபதியைச் சந்தித்துத் தான் தெளிவுபடுத்தினார் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஞானசார தேரர் வெளியிட்ட இந்தக் கருத்து தொடர்பில் உடனடியாக விசா ரணை முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவரது கருத்து மிகவும் பாரதூரமானது. அவரது அறிக்கைகளை விசாரிக்க வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்று குறிப்பிடப்பட் டுள்ளது.

இதனிடையே, 2019 ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் கத்தோலிக்கர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்பது தொடர்பில் தான் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அறிவுறுத்தியிருந்தார் என ஞானசார தேரர் தெரிவித்திருந்த கருத்தை கொழும்பு மறைமாவட்டம் மறுத்துள்ளது.

அத்துடன், இதுபோன்ற எந்தவொரு தாக்குதலும் நடத்தப்படலாம் என்று ஞானசார தேரரால் கொழும்பு பேராயருக்கு எச்சரிக்கவில்லை என்றும் கொழும்பு மறைமாவட்டம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, ஞானசார தேரரால் வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து தொடர்பில் கொழும்பு பேராயர் வாசஸ்தலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கத்தோலிக்க சபையின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் அருட்தந்தை சிறில் காமினி கருத்து வெளியிடுகையில்,

"கலகொட அத்தே ஞானசார தேரரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் உண்மை என்றால் அவருக்கு நாங்கள் விசேட நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆனால், ஜனாதிபதிக்கு இது தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தால் இதற்கான விசாரணைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களுக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினாரா என்பதுதான் எமது கேள்வியாக உள்ளது.

அவ்வாறு தெரியப்படுத்தியிருந்தால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்பில் நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளார் என்பது எங்களுக்குத் தெரியும். கடந்த முறையும் இவ்வாறுதான் தாக்குதல் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் முக்கிய பதவிகளில் உள்ள ஒரு சிலர் அறிந்திருந்தார்கள். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டை விட்டு வெளியேறியவுடன்தான் தாக்குதல் இடம்பெற்றது.

எனவே, ஞானசார தேரர் தற்போது வெளியிட்டுள்ள கருத்து தொடர்பில் மக்கள் மிகவும் அச்சத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள். இது தொடர்பில் முழுமையான விசாரணை யொன்றை நடத்துமாறு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொள்கின்றோம்" - என்றார். (இ)

## மேலும் 1,186 பேர் பூரண குணமடைவு

கொழும்பு, செப்.18

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,186 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 29 ஆயிரத்து 776 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 19 - 04 - 1934

உதிர்வு 15 - 09 - 2021

## குமாரசாமி ஆறுமுகம்

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto, வவுனியா பூந்தோட்டம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி ஆறுமுகம் அவர்கள் 15.09.2021 புதன்கிழமை அன்று வவுனியாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - குஞ்சாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை-தனலட்சுமி தம்பதியரின் மருமகனும், தேவநாயகி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மயில்வாகனம் ஆறுமுகம் அவர்களின் அன்புச் சகோதரரும், சபாலிங்கம்(சபா), தனலட்சுமி(தேவி), கோமளேஸ்வரி(சாந்தா), சுமதி, இந்துமதி(இந்து), பேரின்பலிங்கம் (அப்பன்), சுந்தரலிங்கம்(சுதா), வரதலட்சுமி(வரதா), காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம்(சித்திரன்), கணேசலிங்கம்(மூர்த்தி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,மனோரஞ்சிதம்(ரஞ்சி), நவரட்ணசிங்கம்(ரவி), இந்திராதேவி(இந்திரா), பரமதாஸ்(ரஞ்சன்), உதயராஜ் (ராஜன்), சந்திரா, விஜிதா, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தூவாரகன், தயாநிதி(கீதா) மற்றும் ஜீவிதா, சிவதர்ஷன், சயந்தநிதி, தினேஷ், கஜேந்திரன், செந்தூரன், மோகனப்பிரியா, யசிந்தன், சபேஷன், இசைநிலா, கிருஜநிலா, கண நிலவன், யதுஷன், வர்ணஜா, விவேனுஜா, நாடியா, கரன், லக்ஷி, சஜித், அஜித், ஆரணன், பிரவீன், லஷ்சனா ஆகியோரின் அருமைப் பேரனும்,ஆதனா, கிஷாரா, ரித்தேஷ், ஹரிஷா, ஹரினி, மஹீரா, ஷானுகா, சாருகன் ஆகியோரின் ஆசைப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (17.09.2021) வெள்ளிக்கிழமை அன்று மு.ப. 09:00 மணியளவில் 1/6 A, P.S.C வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
பேரின்பலிங்கம் (மகன்) - 00233244364954
சபாலிங்கம் (மகன்) - 0774155755
தனலட்சுமி(மகள்) - 0775578802
இந்திராதேவி(மருமகள்) - 0779502789
கோமளேஸ்வரி(மகள்) - 0019176158939
சுமதி(மகள்) - 0761130808
இந்துமதி(மகள்) - 0014168540062
பேரின்பலிங்கம் (மகன்) - 00233244364954
சுந்தரலிங்கம் (மகன்) - 0014167267265
வரதலட்சுமி(மகள்) - 0016474023307
ஜீவிதா(பேர்த்தி) - 0016475546551
சஜந்தநிதி(பேர்த்தி) - 0773370900
சபேசன் (பேரன்) - 0033661060298

தகவல்:
**குடும்பத்தினர்.**

ஏகம் உலக அமைதி திருவிழா- 2021



2 கோடி மக்கள் Online மூலம்
கலந்து கொள்ளும் உன்னத நிகழ்வு
நாட்கள் : 17, 18, 19 September 2021
நேரம் : மாலை 6 மணிமுதல் 7 மணிவரை



இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் கலந்து நமக்கும் நமது அடுத்த தலைமுறைக்கும்
அமைதியான, பசுமையான, ஆனந்தமான உலகை உருவாக்குவோம்.
இந்நிகழ்வு
ஓம். ரீ.வியில் நேரலையாக ஒளிபரப்பப்படும்
நேரம் : மாலை 6.00 - 7.00
மற்றும் ஓம். ரீ.வி YouTube Channel ல் ஒளிபரப்பப்படுகிறது
இணைய விரும்புபவர்கள் மேலதிக விவரங்களுக்கு
077 364 7436, 077 684 5463

ஈழநாடு



# ஊரடங்கு கடுமையாக அமுல்!

## ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, செப். 18

நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை கண்டிப்பாக அமுல்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாதவர்கள் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார் என ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை ஒக்ரோபர் 01 அதிகாலை 4.00 மணி வரை நீடிக்க நேற்று முடிவு செய்யப்பட்டது.

நேற்று காலை ஜனாதிபதி கோட்டாபய தலைமையில் இணைய வழியில் நடந்த கோவிட் -19 கட்டுப்பாடு விசேட செயலணிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

## தடுப்பூசி...

பிறப்பிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சு  தெரிவித்துள்ளது.

அரசு மக்களுக்கு ஏதேனும் கட்டுப்பாடுகளை விதிக்க முடிவு செய்தால் உரிய செயல்முறையைப் பின்பற்றும் என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர், சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

## வவுனியாவில்...

மருத்துவ அதிகாரி பிரிவில் 50 பேருக்கும், மாவட்ட பொது மருத்துவமனையில் 2 பேருக்கும், செட்டிக்குளம் ஆதார வைத்தியசாலையில் ஒருவருக்குமாக 53 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் 28 பேருக்கும், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 7 பேருக்கும், மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்குமாக 36 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 8 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேர், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 2 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் ஒருவர், நொதேர்ன் சென்றல் ஹொஸ்பிட்டலில் ஒருவர் என யாழ். மாவட்டத்தில் 16 தொற்றாளர்களும், மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

தவிர, இரணைமடு விமான படைத்தளத்தில் 3 பேர், மன்னார் கடற்படை முகாமில் ஒருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

## பட்டமளிப்பு...

கலாநிதி அசேல குணவர்த்தன அறிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 07 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கான அனுமதி கோரி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கைக்கான பதில் கடிதத்திலேயே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி அசேல குணவர்த்தன மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி அசேல குணவர்த்தன நேற்று  முன்தினம் மாலை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

தற்போது நாட்டில் விதிக்கப்பட்டுள்ள கோவிட் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு அமைய அனைத்து விதமான ஒன்றுகூடல்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதால் தங்களின் கோரிக்கையின் படி நிகழ்வை நடத்துவதற்கு அனுமதிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

எனினும் எதிர்வரும் நாள்களில் கோவிட் 19 நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவது பற்றி அன்றைய நாளில்  சாதகமாகப் பரிசீலிக்கப்படலாம். நிகழ்நிலையில் பட்டமளிப்பு விழாவை நடாத்துவதற்கு ஆட்சேபனை ஏதுமில்லை-என்று  குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, நாட்டில் மன்னார் உள்ளிட்ட சில இடங்களில் இது போன்ற நிகழ்வுகள் குறித்து ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார்.

சுகாதார அமைச்சின் பேச்சாளர் மேலும் தெரிவித்ததாவது:-

தடுப்பூசி போடப்படாத நபர்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முடிவு செய்தால், அது ஒப்புதல் செயல்முறை மூலம் செல்ல வேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், கொரோனா வைரஸிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்காகவும் ஊரடங்கு விதிக்கும் முடிவு எடுக்கப்பட்டது.

சுகாதார அமைச்சு அத்தகைய உத்தரவுகளை பிறப்பிக்காததால், ஒரு கட்டத்துக்குள் நுழைவதற்கு தடுப்பூசி அட்டை கோரப்படுவதன் மூலம் மக்களின் உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் நிறுவனங்கள் மீது விசாரணை நடத்தப்படும் -என்றார்.

கோவிட் -19 தொற்றாளர்கள் மற்றும் இறப்புகளின் சமீபத்திய செங்குத்தான குறைவு முக்கியமாக அரசினால் நடத்தப்பட்ட பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்ரிஜென் சோதனையின் குறைவால் ஏற்பட்டதாக சுகாதாரத்துறை தொழிற்சங்கங்களின் குற்றச்சாட்டுகளை சுகாதார அமைச்சின் பேச்சாளர் மறுத்தார்.

கடந்த சில வாரங்களாக நாடு முழுவதும் விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவே தொற்றாளர்கள் மற்றும் இறப்புகளின் சமீபத்திய குறைவுக்கு காரணமாகும். பரிசோதனை குறைக்கப்படவில்லை என்று மருத்துவ வல்லுநர் ஹேமந்த ஹேரத் உறுதியளித்தார்.

## இளைஞன்...

மீட்டு, வைத்தியசாலையில் அனுமதித்த போதே இளைஞன் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் கீரிமலை, நல்லிணக்கபுரத்தை சேர்ந்த ம. ஜெனுசன் (வயது 24) என்பவரே உயிரிழந்தார்.

இந்த இளைஞன் குழுவொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, குறித்த இளைஞன் நேற்று முன்தினம் மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டிருந்தவேளை, அங்கு சிலர் அவருடன் முரண்பட்டதாகவும், அவர்களே இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகவும் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆகவே, கொலைச் சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகளை முன்னெடுத்து, கொலையாளிகளை கைது செய்யக் கோரி இளைஞனின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

## கொரோனாவால்...

விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 938 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 121 பேரில் 59 பெண்களும் 62 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## ஊரடங்கு சட்டம்...

நாட்டின் நிலைமையைக் கருத்திற்கொண்டு, தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, ஒக்ரோபர் மாதம் 01ஆம் திகதியன்று நீக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதென, இந்தக் கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

இதன்போது, பிள்ளைகளுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதியினால் கேள்வி எழுப்பிய போது பதிலளித்து உரையாற்றிய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்த்தன, "நாள்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள 12 முதல் 19 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி ஏற்றுமாறு, விசேட சுகாதார நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது" என்றார். அத்துடன், "சிகிச்சையக (கிளினிக்) விசேட மருத்துவர்களின் கண்காணிப்பின் கீழ், பெற்றோர் களின் அனுமதியுடன், அந்தச் சிகிச்சையகங்களுக்குள் வைத்து மாத்திரம் மேற்படி சிறுவர்களுக்கான தடுப்பூசியை ஏற்றத் திட்டமிடப்பட்டுள்ளது" என்று, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

12 - 15 வயதுக்கிடைப்பட்ட ஆரோக்கியமான சிறுவர்களுக்குரிய தடுப்பூசி ஏற்றல் தொடர்பிலும், விசேட வைத்திய குழுவினரிடம், ஜனாதிபதி அவர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அந்தக் குழு, உலகின் ஏனைய நாடுகளில்கூட, அதற்கான நடவடிக்கைகள் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் இருப்பினும், 15 - 19 வயதுக்கிடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலுக்குரிய பரிந்துரை கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டது.

இதன்படி, நாட்டிலுள்ள 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட அனைத்துச் சிறுவர்களுக்குமான தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்தி முடிக்குமாறும் வைத்தியசாலைகளுக்குள் வைத்து மாத்திரம் அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலை முன்னெடுக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். அத்துடன், அது தொடர்பில் அச்சிறுவர்களின் பெற்றோருக்குத் தெளிவுபடுத்துவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

விசேட மருத்துவ குழுவின் பரிந்துரைக்கமைய, அனைத்து சிறுவர்களுக்கும், பைஸர் தடுப்பூசியை மாத்திரம் ஏற்று மாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். தெரிவு செய்யப்பட்ட தடுப்பூசி களை மாத்திரமே இளைஞர் - யுவதிகள் எதிர்பார்க்கும் நிலைமை தோன்றியுள்ளது என்றும் அவர்களுக்கென விசேட தடுப்பூசியொன்று அறிமுகப்படுத்தவில்லை என்றும், நாட்டு மக்களுக்கு ஏற்றப்படும் தடுப்பூசிகள் அனைத்தும் தரம்வாய்ந்தவை என்றும் எடுத்துரைத்த விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன மற்றும் பேராசிரியர் நீலிகா மலவிகே ஆகியோர், அதனால், விசேட தடுப்பூசியொன்று கிடைக்கும் வரை காத்திருக்காது, அனைவரும் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள முன்வர வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

சிக்கல் நிலையுடன்கூடிய கோவிட் நோயாளிகளுக்கு ஆயுர்வேத சிகிச்சையளிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் இதன் போது கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காக, கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலைகளில், கொரோனா சிகிச்சை நிலையங்களை உருவாக்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம், காணிப் பதிவு அலுவலகம் போன்ற அத்தியாவசியச் சேவைகளைப் பொது மக்களுக்கு வழங்கும் நிறுவனங்களின் பணிகளையும் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துரைத்த ஜனாதிபதி, இது தொடர் பில் அந்நிறுவனங்களின் தலைவர்கள், உரிய தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

நிலவும் சவால்மிக்க நிலைமைக்கு மத்தியிலும், ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளில், நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் வேகத்தை உயர்ந்தபட்சத்தில் பேண முடிந்ததாகக் கூறிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, அதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் துறையினருக்கும் நன்றி தெரிவித்தார்.

மக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் பொருளாதார வழிகள் என்பன எக்காரணங்கொண்டும் பாதிக்காத வகையில், அத்தியாவசியச் சேவைகளை முன்னர் போன்று தொடந்து முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் தொடர்ந்து திறக்க நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

200க்கும் குறைவான மாணவர் கொள்ளளவைக் கொண்டுள்ள கிராமிய பாடசாலைகளைத் திறப்பது தொடர்பிலும், இன்றைய கூட்டத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது. இது விடயத்தில், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் அனைவரும், கல்வி அமைச்சுடன் இணைந்துப் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும், ஜனாதிபதி அவர்கள் எடுத்துரைத்தார். சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து, பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கான சுகாதார வழிகாட்டுதல்கள் பற்றிய தெளிவுபடுத்தல்களை வழங்க வேண்டுமென்றும், இதன்போது எடுத்துரைக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளல் தொடர்பில் பொதுமக்களை ஊக்குவிக்கும் முழுப் பொறுப்பும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உள்ளதென்று, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹனவிடம், ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களில் ஈடுபடுவோர், சுய தொழில்களை மேற்கொள்வோர், எவ்விதத் தடையுமின்றி தமது வாழ்வாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பொறுப்பென்றும் ஜனாதிபதிதெரிவித்தார்.

## குவிந்தனர்...

நாட்டில் கொறொனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மதுபானசாலைகள் அனைத்தும் ஊரடங்கு காலங்களில் மூடப்பட்டிருந்த நிலையில் நேற்று முதல் அரசாங்கத்தினால் அவற்றைத் திறக்க அனுமதி அளிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து மதுபானசாலைகளின் முன்னாலும் நீண்ட வரிசையில் மது பிரியர்கள் காத்திருந்து மதுபானத்தை கொள்வனவு செய்தமையை காணக்கூடியதாக இருந்தது.

அத்தோடு, மதுபானச்சாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதோடு, மதுப்பிரியர்கள் சமூக இடைவெளியை பேணாமல் மதுபானங்களை பெற்றுச்சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

## நேற்று மட்டும்...

இலங்கை மத்திய வங்கியிடமிருந்து வணிக வங்கிகள் 27.81 பில்லியன் ரூபாய்களை 6 வீத வட்டிக்கு கடனாகப் பெற்றன.

இதனையடுத்து ஒரே நாளில் பணவீக்கம் 24.78 பில்லியன் அதிகரித்து -209.83 பில்லியனாக உயர்வை சந்தித்துள்ளது.

## 500,000 கடந்தது...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 500,764 ஆக அதிகரித்துள்ளது.

ஈழநாடு
Eelanadu




# பொதுமக்கள் பிரச்னை அரசால் புறக்கணிப்பு!

## எதிர்க்கட்சி தலைவர் குற்றச்சாட்டு



**கொழும்பு, செப். 18**

**பொதுமக்களின் பிரச்னைகளைக் கருத்தில்கொள்ளாமல் அரசு செயல்படுகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“விவசாயிகள் விவசாயத்தை விட்டு விலகிச் செல்வதைத் தடுக்கவும், விவசாயிகளின் சீரழிந்து வரும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உடனடித் தீர்வுகளை அரசு வழங்க வேண்டும்.

உழவர் சமூகம் எதிர்நோக்கும் பிரச்னைகளை இந்த அரசால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கொரோனாத் தொற்று நோயுடன் போராடும் உலகின் பல நாடுகள் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்துள்ள போதிலும் இலங்கை அரசு இரண்டையும் புறக்கணித்துள்ளது” - என்றார். (இ)

# தடுப்பூசி செலுத்துவதை தாமதப்படுத்தியதன் காரணமாகவே கொரோனா மரணங்கள் உச்சம்

## மரிக்கார் எம்.பி. சுட்டிக்காட்டு

*கொழும்பு, செப். 18*

தடுப்பூசி செலுத்துவதைத் தாமதப்படுத்தியதன் காரணமாகவே நாட்டில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“அரசின் புள்ளிவிவரத் தகவலுக்கு அமைவாக நாட்டில் இதுவரை கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தைக் கடந்து 12 ஆயிரத்தை நெருங்குகின்றது. இந்த மரண எண்ணிக்கையைப் பார்க்கும்போது கொரோனாத் தொற்றால் மரணிப்பது சாதாரண விடயமாக மாறியுள்ளது.

எமது நாட்டில் மக்களின் உயிருக்குக் கிடைத்திருக்கும் முக்கியத்துவம் இதுவென்றே கூறத் தோன்றுகிறது.

நாம் சிலருக்கு சில விடயங்களை நினைவுப்படுத்த வேண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் ஏற்படுவதற்கு முன்பாக நாம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தோம்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டில் ஏற்பட்டால் அதனைத் தடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதா, முகக்கவசங்கள் கொண்டு வரப்பட்டுள்ளனவா என பாராளுமன்றத்தில் நாம் கேள்வி எழுப்பியிருந்தோம்.

அதன்போது இருந்த சுகாதார அமைச்சர் அவ்வாறான ஒரு தேவை நாட்டுக்கு ஏற்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

மெய்ஞானத்தின் பக்கம் செல்லாது விஞ்ஞானபூர்வமாக கொரோனாவின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபடுபடுமாறு நாம் அரசை வலியுறுத்தினோம்.

விஞ்ஞானபூர்வமாகத் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை முன்னெடுக்குமாறும் கோரினோம்.

நாம் கூறியதை அவர்கள் கேட்கவில்லை. கங்கைகளில் முட்டிகளை எறிந்தனர். இவ்வாறு கங்கைகளில் முட்டிகளை எறிந்தவர்களும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகினர்.

இதனை நினைத்து நாம் மகிழவில்லை. எனினும், யதார்த்தத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இறுதியில் அரசு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையை ஆரம்பித்தது.

சரியான முறையில் ஆரம்பத்திலேயே தடுப்பூசியைக் கொண்டுவந்திருந்தால் இந்த 11 ஆயிரம் பேரை இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

கொரோனா வைரஸ் தொற்று மரணங்கள் அதிகரித்தமைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று எதிர்க்கட்சியின் கோரிக்கையை ஏற்காதது, மற்றையது கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதைத் தாமதப்படுத்தியமை. எனவே, நாட்டில் கொரோனா மரணங்கள் அதிகரித்தமைக்கு அரசே முழுப்பொறுப்பு” - என்றார். (இ)

# தனியார் பஸ் ஊழியர்களுக்கு சலுகைத் திட்டம் வழங்கும் அரசு

*கொழும்பு, செப். 18*

தனியார் பஸ் ஊழியர்களுக்கு சலுகை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது எனப் போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் 17 ஆயிரம் தனியார் பஸ் ஊழியர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது.

கொரோனாத் தொற்று நோயால் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கே இந்தச் சலுகை வழங்கப்படவுள்ளது.

பஸ்களை இயக்கும்போது கருத்தில்கொள்ளப்படும் அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்படும் வகையில் இது வழங்கப்படும்.

ரயர்கள், பெற்றோல், டீசல், என்ஜின் ஒயில், பட்டரி, உதிரிப் பாகங்கள் மற்றும் காப்பீடு ஆகியவற்றின் விலையை உள்ளடக்கிய வவுச்சர்கள் சலுகைத் தொகுப்பில் சேர்க்கப்படும்” - என்றார். (இ)

# மீளவும் எம்.பியாக கெட்டகொட; விசேட வர்த்தமானி வெளியீடு

*கொழும்பு, செப். 18*

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு, ஜயந்த கெட்டகொடவின் பெயர் பிரசுரிக்கப்பட்ட விசேச வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநராகப் பொறுப்பேற்றுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் அண்மையில் விலகியதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொட நியமிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 - 03 - 1927 |  | 14 - 09 - 2021 |

## திருமதி சொர்ணாம்பாள் நல்லையா

**(முன்னாள் அதிபர் – கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம், மன்னார் இந்துக் கல்லூரி, முன்னாள் ஆசிரியை – கனகரத்தினம் மகா வித்தியாலயம்)**

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, கனடா Mississauga ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சொர்ணாம்பாள் நல்லையா அவர்கள் (14.09.2021) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் கணபதிப்பிள்ளை தையலம்மை தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான அம்பலவி சின்னையா மங்களநாயகம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நல்லையா (இளைப்பாறிய கல்லூரி ஆலோசகர்) அவர்களின் ஆருயிர் துணைவியாரும்,காலஞ்சென்ற Dr. சிவானந்தன், சிவநாதன், சிவநேசன், சிவராணி, சிவமணி, சிவராசன், சிவாஜி, சிவவாணி, சிவவேணி, சிவரமணி, சந்திரா ஆகியோரின் அருமை அம்மாவும், யோகேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, திருமகள், நிர்மலன்நாதன், பாலசந்திரன், விமலாவதி, திருவதனா, சிவபாதசுந்தரம், விக்னேஸ்வரராஜா, Dr.சிவேந்திரன், விமலதாசன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற செல்வநாயகம், சீவநாயகம், செல்வராணி, சபாநாயகம் ஆகியோரின் அருமை அக்காவும்,மனோன்மணி, காலஞ்சென்ற சரோஜினி, சற்குணம், நல்லம்மா, காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், வல்லிபுரம், கமலாதேவி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாந்தினி, சந்திரிகா, சக்தி, முகுந்தன், ஜெயஶ்ரீ, சிவேந்திரன், செல்வேந்திரன், ரவீந்திரன், ராஜேந்திரன், சர்வேந்திரன், சத்தியேந்திரன், ஞானேந்திரன், கஜேந்திரன், வைஜந்தி, பிரபாகரன், சிவானந்தி, காலஞ்சென்ற பிரதீபன், விஷ்வமாலினி ஆகியோரின் அன்பு பெரிய மாமியும், ஆரணி, ஜனனி, அருணன், மல்லிகா, காலஞ்சென்ற ஜெயம், சுசீலா, சாந்தன், ரவி, அபி, மணிமேகலை ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சிவகாமி, அபிராமி, சுருதி, அருஜுன் ஆகியோரின் பெரியம்மம்மாவும்,அரி, ஆரணி ஆகியோரின் பெரியப்பம்மாவும்,அனுஷா, அபிராமி, அதிதா, அருள், சத்தியா, ஜெகா, அகிலா, நிஷாந்த், கிரிசாந்த், ஐங்கரன், ஆஷா, ஹரிஹரன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், மீரா, சுசி, ஆரபி, அசோகன், அரன், காலஞ்சென்ற அகிலன், ஆதிரை, அம்பிகை, ஆர்த்தி, ஆனந்தி, பைரவி, மயூரி, சிந்து, வாசுகி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், ஆதன், ருக்மணி, ஆதவன், அன்பன், இசானி, ஜனவி, திலன், சகானா, அமரா, சூரியன், கிரன், நோலன், இபி, முமு, கியூகோ, அரன், அகிலன், கிருஷ்ணா, அஞ்ஜனா, சேயோன், மைதிலி, நிக்கலஸ், மடலின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

*பார்வைக்காக*
Saturday, 18 Sep 2021 6:00 PM - 9:00 PM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*கிரியை*
Sunday, 19 Sep 2021 7:00 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

*தகனம்*
Sunday, 19 Sep 2021 9:00 AM
St John’s Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சிவமணி பாலச்சந்திரன் (மகள்)**
+14169047511

தகவல்:
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்




6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி



7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- ஜீன்ஸ்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்




10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு